விலை ரூபா: 10.00

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி

Valampurii

பக்கங்கள்: பத்து

சங்கு 07 வள்ளுவர் ஆண்டு 2037 பங்குனி 25 சனிக்கிழமை (08.04.2006) தொலைபேசி 222 3378, 222 7644 ஒலி 110

ராம்கோ
MADRAS CEMENTS LTD
RAMCO CEMENT
RAMCO
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது.
ராம்கோ சீமெந்து

# தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் சுட்டுக் கொலை

## பின்தொடர்ந்து சென்றோர் கைவரிசை

(திருகோணமலை)



திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் நேற்றுக் காலை 9.30 மணியளவில் இனந் தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார். அவரைப் பின்தொடர்ந்து சென்ற இருவர் அவர் கடமை யாற்றும் திருகோணமலை இலங்கை வங்கியின் பிரதான கிளைக்குள் வைத்து சுட்டு விட்டுத் தப்பிச் சென்றதாக அங்கிருந்து வரும் செய்திகள் தெரிவிக்கின்றன. இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்புப் பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் வெற்றிடத்திற்காக விக்னேஸ்வரன் நேற்றுப் பதவியேற்கவிருந்த நிலையில் அவர் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (10 ஆம் பக்கம் பார்க்க)

## இலங்கையில் அமைதி நிலை ஏற்பட இந்தியாவின் பங்களிப்பு அவசியம்

### எரிக்சொல்ஹெய்ம் இந்தியாவில் தெரிவிப்பு

(புதுடில்லி)

இலங்கையில் அமைதியினை நிலை நாட்ட இந்தியாவின் பங்களிப்பு மிக அவசியம் என நோர்வே அரசாங்கம் அறிவித்துள்ளது. இலங்கைப் பயணத்தை முடித்து விட்டு நோர்வே நாட்டின் அபிவிருத்தி அமைச்சர் எரிக்சொல்ஹெய்மும் இலங்கை சமாதான வழிமுறைகளுக்கான நோர்வே நாட்டின் சிறப்புப் பிரதிநிதி ஜோன் ஹான்சன் பௌயரும் இந்தியா சென்றடைந்தனர்.

இந்தியா சென்ற இவர்கள் நேற்றுப் புதுடில்லியில் இந்திய வெளியுறவுத் துறை அமைச்சர் சியாம்சரணைச் சந்தித்தனர். சமாதான நடவடிக்கைகளின் தற்போதைய நிலைவரம் குறித்தும் இலங்கையில் நடத்திய பேச்சுவார்த்தைகளின் விபரங்கள் குறித்தும் இச் சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது.

இதன் பின்னர் ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த எரிக்சொல்ஹெய்ம் ஜெனீவாவில் இம்மாதம் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை நடாத்தத் திட்டமிட்டுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்பு பல தடைகள் இருந்தாலும் கூட பேச்சுவார்த்தை திட்டமிட்டபடி நடைபெறும் எனத் தெரிவித்தார். (10 ஆம் பக்கம் பார்க்க)

## விக்னேஸ்வரன் படுகொலைக்கு விடுதலைப்புலிகள் கடும்கண்டனம்

(கிளிநொச்சி)

இராணுவத்தினரது உதவியுடனேயே திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்டுள்ளதாக தமிழீழ விடுதலைப்புலிகள் குற்றஞ் சாட்டியுள்ளனர்.

விடுதலைப்புலிகளின் திருகோணமலை மாவட்ட அரசியல் துறைப் பொறுப்பாளர் சி. எழிலன் இது தொடர்பாகக் கூறியதாவது,

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் நேற்றுக் (10 ஆம் பக்கம் பார்க்க)

## விக்னேஸ்வரனின் படுகொலை சமாதானப் பேச்சைப் பாதிக்கும்!

### தமிழ்க் கூட்டமைப்பு எச்சரிக்கை

(கொழும்பு)

பாராளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கத்தின் கொலையைத் தொடர்ந்து வெற்றிடமாகவிருந்த அவரின் இடத்திற்குத் தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பிரதிநிதியாகக் குறிப்பிடப்பட்டிருந்த திருகோணமலையைச் சார்ந்த வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் அரச பயங்கரவாதிகளால் கொலை செய்யப்பட்டமையினை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களாகிய நாம் மிக வன்மையாகக் கண்டிக்கின்றோம். (10 ஆம் பக்கம் பார்க்க)

## குற்றவாளிகளை சட்டத்தின் முன்நிறுத்த ஜனாதிபதி ராஜபக்ஷ அவசர உத்தரவு

(கொழும்பு)

திருகோணமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் வன்னியசிங்கம் விக்னேஸ்வரன் படுகொலை செய்யப்பட்ட சம்பவத்தினை அரசாங்கம் வன்மையாகக் கண்டித்துள்ளது.

ஜனாதிபதியின் ஆலோசனைக்கமைய பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோவும் குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபரும் திருகோணமலைக்குச் சென்று நிலைமைகளை ஆராய்ந்துள்ளதாக அரசாங்கத் தகவல் திணைக்களம் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட் (10 ஆம் பக்கம் பார்க்க)

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் யாழ்ப்பாணத்திற்கு திடீர் விஜயம்

(யாழ்ப்பாணம்)

பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ நேற்று யாழ்.வந்தார். விசேட இராணுவ விமானம் மூலம் பலாலி விமான நிலையத்திற்கு வந்த அவர் பலாலியில் இராணுவ உயர் அதிகாரிகளைச் சந்தித்து பாதுகாப்பு நிலைமைகள் தொடர்பாக ஆராய்ந்தார்.

பின்னர் அங்கிருந்து ஹெலி மூலம் துரையப்பா விளையாட்டு மைதானத்தில் வந்திறங்கிய கோட்டபாய ராஜபக்ஷ சுபாஸ் ஹோட்டலில்அமைந்திருக்கும் 512வது இராணுவத் தலைமையகத்திற்கு அழைத்துச் செல்லப் பட்டார்.

அங்கு யாழ்ப்பாணப் பாதுகாப்பு நிலைகள் குறித்து தளபதிகளுடன் கலந்துரையாடிய பின்னர் பலாலி விமானத் தளத்திற்குச் சென்றார். அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்கும் இடையில் எதிர்வரும் 19 ஆம்திகதி ஜெனீவாவில் நடைபெறவுள்ள இரண்டாம் சுற்றுப் பேச்சுவார்த்தைக்கு முன்னர் யாழ்.மாவட்ட பாதுகாப்பு நிலைகள் குறித்து ஆராய்வதற்காகவே இவ் விஜயத்தினை பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் கோட்டபாய ராஜபக்ஷ மேற்கொண்டதாகத் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ச-5)

## விக்னேஸ்வரனின் படுகொலை சமாதானத்திற்கு பேராபத்து

### தமிழ்ச்செல்வன் க.கா.குழுவிற்குக் கடிதம்

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியப் பற்றாளரும் மனித உரிமை ஆர்வலருமான வ.விக்னேஸ்வரன் திருகோணமலையில் வைத்துக் கொலை செய்யப்பட்டுள்ளதை மிகுந்த அதிர்ச்சியுடனும் கவலையுடனும் இலங்கை யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுவினரின் உடனடிக் கவனத்திற்கு விடுதலைப்புலிகள் கொண்டு சென்றுள்ளனர்.

இச்சம்பவம் தொடர்பாக தமிழீழ அரசியல் துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் யுத்தநிறுத்தக் கண்காணிப்புக் குழுத் தலைவர் ஜெனரல் உல்ப் ஹென்றிக்சனுக்கு அனுப்பி வைத்துள்ள கடிதத்தில், இச்சம்பவம் தற்போது நிலவுகின்ற கள நிலைமைகளின் அடிப்படையில் வைத்து நோக்கும் இடத்து யுத்தநிறுத்த ஒப்பந்தத்தை முழுமையாகப் பின்பற்றுவது எனவும் ஜெனீவாவில் ஏற்றுக் கொள்ளப்பட்டவாறு அரச கட்டுப்பாட்டுப் பகு திகளில் துணை இராணுவக் குழுக்களின் செயற்பாட்டை இல்லாது செய்வது என்ற இலங்கை அரசின் வாக்குறுதிகள் அர்த்த மற்றுப் போயுள்ளது என அக்கடிதத்தில் தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார். (04)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்:
021 - 222 3891, 222 6297, 077 - 2349999,
011 - 2372952/3, 011 - 2360290/1
e.mail:- jaffna @ expoavi.com, reservations @ expoavi.com.
எக்ஸ்போ ஏயார்
வானத்தில் உங்கள் நண்பன்
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...

நடுவுநிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பணியில் மகளிர் முன்னுதாரணமாக செயற்பட வேண்டும்

## சமூக அபி. மன்றத் தலைவர்

(தென்மராட்சி)

பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்யும் பணியில் மகளிர் முன்னுதாரணமாகச் செயல்பட முன்வரவேண்டும். மகளிர்களின் அர்ப்பணிப்பான பங்களிப்பு இல்லாமல் சமாதானத்தையோ அல்லது அபிவிருத்தியையோ நாட்டில் ஏற்படுத்திக்கொள்வது சுலபமான காரியமல்ல:

இவ்வாறு சமூக அபிவிருத்தி மன்றத்தின் தலைவரான திருமதி நா.ஜெகதீசன் கைதடி மத்தி வளர்மதி சனசமூக நிலையத்தில் அறவழிப்போராட்டக் குழுவினால் நடாத்தப்பட்ட சமாதானமும் அபிவிருத்தியும் தொடர்பான செயல்பட்டறையில் உரையாற்றும்போது தெரிவித்தார்.

அறவழிப்போராட்டக் குழுவின் தலைவர் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் தலைமையில் நடை பெற்ற இந்நிகழ்வின்போது சனசமூக நிலையத் தலைவர் எஸ்.கந்தசாமி இயக்குநர் வீ.ஜீ.தங்கவேல் ஆகியோரும் பங்குபற்றியிருந்தனர்.

ஐம்பதுக்கு மேற்பட்ட யுவதிகள், இளைஞர்கள் பங்குகொண்டிருந்த இச்செயல்பட்டறையில் திருமதி நா.ஜெகதீசன் தொடர்ந்து குறிப்பிடும்போது,

கடந்த 25 வருடங்களுக்கு மேலாக எமது பிரதேசங்களில் இடம்பெற்ற யுத்த அனர்த்தங்கள் காரணமாக யாவுமே அழிக் கப்பட்டு விட்டன. இவற்றினை நாம் மீளவும் கட்டியெழுப்ப வேண்டும்.

எனவே எமது பிரதேசத்தில் சமாதானத்தையும் அபிவிருத்தியையும் ஏற்படுத்தும் பணியில் நாம் அனைவருமே அர்ப்பணிப்பான ஈடுபாட்டுடன் செயல்படவேண்டும்.

அத்துடன் தற்போதைய சமாதான முயற்சிகளை அர்த்தமுள்ள சமாதானமாக மாற்றுவதற்கு பொதுமக்களின் பங்களிப்பு மிகவும் அவசியமாகும் என்று குறிப்பிட்டார்.

கொழும்பிலுள்ள மனிதநேய அமைப்புக்களின் கூட்டமைப்பின் ஆதரவுடன் நடாத்தப்பட்டுவரும் இச்செயல்திட்டத்தின்போது வீ.ஜீ. தங்கவேல், டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம் ஆகியோரும் வளவியலாளர்களாகப் பணியாற்றினர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

திட்ட இணைப்பாளர் வடிவேல் சிவா கரன் நன்றியுரை வழங்கினார்.

(க-16)

## வீதி திருத்தப்படவில்லை

சாவகச்சேரி நகரசபை எல்லைக்குட்பட்டிருக்கும் துர்க்கை அம்மன் கோவில் வீதி நீண்டகாலமாய் புனரமைப்புச் செய்யப்படாமல் இருப்பதால் பொதுமக்கள் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனர்.

இந்த வீதியில் குழிகளும் குன்றுகளும் நிரம்பிக்காணப்படுகின்றன. வாகன ஓட்டுநர்களும் பல கஷ்டங்களை அனுபவித்து வருகின்றனர்.

இக்குறிப்பிட்ட வீதியினால் துர்க்கை அம்மன் ஆலய தரிசனத்துக்குச் செல்லும் பக்தர்கள் நிம்மதியாகச் சென்றுவரமுடியாத நிலையே காணப்படுகின்றது.

இவ்வீதியைப் புனரமைப்புச் செய்யும்படி பல்வேறு கோரிக்கைகளை நகரசபைக்கு விடப்பட்டிருந்த போதிலும் கூட இதுவரையும் எத்தகைய முன்முயற்சிகளும் எடுக்கப்படவில்லை எனத் தெரியவருகின்றது. (க-16)

## பலிக்களம் ஆரம்பம்

(ஊர்காவற்றுறை)

யாழ்.திருமறைக்கலாமன்ற நாடக அரங்கில் கடந்த 5ஆம் திகதி மாலை 7.00 மணிக்கு யேசுவின் திருப்பாடுகளின் காட்சி கள் அடங்கிய பலிக்களம் ஆற்றுகை ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது. நாளை ஞாயிற்றுக்கிழமையுடன் இவ் ஆற்றுகை நிறைவு பெறும்.

(க-72)

# பாடசாலைக்குச் செல்லாத சிறுவர்கள்

(தென்மராட்சி)

கைதடி பிரதேசத்திலுள்ள கிராமங்களில் வதியும் நூற்றுக்கணக்கான சிறுவர்கள் தமது பாடசாலைக்கல்விக்கு இடை நடுவில் முற்றுப்புள்ளி வைத்துள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இத்தகைய சிறுவர்களை இனங்கண்டு அவர்களை மீண்டும் பாடசாலைக்குச் செல்ல வைப்பதற்கான முயற்சிகளில் கைதடி பிரதேசத்தில் இருக்கின்ற சன சமூக நிலையங்கள் ஈடுபட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

இதேசமயம் கிராமிய மட்டங்களில் இருக்கின்ற குடும்பங்கள் வருமானம் குறைந்த நிலையிலேயே பாடசாலைகளுக்குச் செல்கின்ற பிள்ளைகளை தொழில் முயற்சிகளுக்கு அனுப்பிவருகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

(க-16)

## வெளிவாரி மருந்தாளர் பரீட்சை ஒத்திவைப்பு

(யாழ்ப்பாணம்)

இன்றும் நாளையும் நடைபெறவிருந்த வெளிவாரி மருந்தாளர் பரீட்சை தவிர்க்க முடியாதகாரணத்தினால் பிற்போடப்பட்டுள்ளது. புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும்.

(க)

## பயிற்சிப் பட்டறை

சிறுவர் பாதுகாப்பு மற்றும் உரிமைகள் சம்பந்தமான பயிற்சிப் பட்டறை நேற்று முன்தினமும் நேற்றும் நடைபெற்றது. இப்பயிற்சிப் பட்டறை தொடர்ந்து இன்றும் நடைபெறவுள்ளது.

நல்லூர் யூரோவிலில் நடைபெற்றுவரும் இப்பயிற்சிப் பட்டறையில் நேற்று முன்தினம் நடைபெற்ற நிகழ்வில் சிறுவர் பாதுகாப்புக் குழு மற்றும் நன்நடத்தை சிறுவர் பாதுகாப்பு சேவை திணைக்கள உத்தியோகத்தர்களும் கலந்துகொண்டனர்.

இப்பயிற்சிப்பட்டறையின்போது சிறுவர்களது கடமைகள் உரிமைகள் தொடர்பாகவும் சிறுவர் துஷ்பிரயோக பிரச்சினைகளிலிருந்து அவர்களை எவ்வாறு பாதுகாப்பது என்பது தொடர்பான நடவடிக்கைகளும் சிறுவர் கல்வி உரிமை தொடர்பாகவும் கலந்தாலோசிக்கப்பட்டது. (ச-133)

## வெப்பநோய்

ஊர்காவற்றுறைப் பிரதேசத்தில் நிலவும் கடுமையான வெப்பம் காரணமாக கண் நோய், கூவைக்கட்டு, பொக்குளிப்பான், வயிற்றோட்டம் போன்ற நோய்கள் பரவி வருகின்றன. (க-72)

# அவசரகாலச் சட்டம் மேலும் ஒரு மாத காலத்துக்கு அமுலாகும்

(கொழும்பு)

பாராளுமன்றம் நேற்றுக் கூடியபோது அவசரகால நிலையை மேலும் ஒருமாத காலத்தினால் நீடிக்கும் பிரேரணை ஏற்றுக் கொள்ளப்பட்டது.

இந்தப் பிரேரணையை சபையில் சமர்ப்பித்து ரட்ணசிறி விக்கிரமநாயக்க உரை நிகழ்த்துகையில்,

சென்ற மாதத்தில் 10 கொலைகளும்த 21 கொலைகளுக்கான முயற்சிகளும் இடம் பெற்றுள்ளதால், அவசரகால நிலைமையை மேலும் ஒருமாத காலத்துக்கு நீடிக்க வேண்டிய அவசியம் ஏற்பட்டுள்ள தென்று கூறினார்.

இம்மாதம் 19 ஆம் திகதி அரசாங்கத்துக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையில் ஜெனீவாவில் நடைபெறவிருக்கும் இரண்டாவது சுற்றுப் பேச்சுவார்த்தைகள் வெற்றிபெறுவதற்கு சகல தரப்பினரும் அர்ப்பணித்து பணிபுரிய வேண்டுமென்றும் பிரதமர் கேட்டுக்கொண்டார்.

பாராளுமன்றத்தில் நேற்றுக் காலை 10.10 மணியளவில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு அங்கத்தவர்கள் ஆர்ப்பாட்டமொன்றை நடத்தியதால் சபை நடவடிக்கைகள் 10 நிமிடங்களுக்கு இடைநிறுத்தப்பட்டன.

திருகோணமலையில் இடம்பெற்றதாகக் கூறப்படும் சம்பவத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து ஆர்ப்பாட்டத்தை நடத்திய தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அங்கத்தவர்களை அவர்களது ஆசனங்களுக்கு திரும்பிச்செல்லுமாறு சபாநாயர் டபிள்யூ. ஜே.எம். லொக்குபண்டார விடுத்த வேண்டுகோளையும் அவர்கள் உதாசீனம் செய்து ஆர்ப்பாட்டத்தை நடத்தினார்கள்.

இவ்வாறு சபாநாயகர் அங்கு உரை நிகழ்த்துகையில்,

தேர்தல் சீர்திருத்தங்கள் சம்பந்தமான பாராளுமன்ற விசேட குழுவின் தலைவராக அமைச்சர் தினேஷ் குணவர்த்தன நியமிக்கப்பட்டுள்ளாரென்று தெரிவித்தார்.

சுதந்திரமான ஆணைக்குழுக்களை இயன்றளவு விரைவில் நியமிப்பதற்குத் தேவையானநடவடிக்கைகளைமேற்கொள்ளும்படி ஜனாதிபதி தமக்கு கடிதம் மூலம் அறிவித்துள்ளாரென்றும் சபாநாயகர் தெரிவித்தார்.

(க-7)

# பாடசாலை உபகரணங்கள் அன்பளிப்பு

(தென்மராட்சி)

சாவகச்சேரி லயன்ஸ் கழகம் நாவற்குழி வீடமைப்புத்திட்டத்தில் இருக்கும் 100க்கு மேற்பட்ட பாடசாலை செல்லும் மாணவர்களுக்கும் முன்பள்ளி சிறுவர்களுக்கும் பாடசாலை உபகரணங்கள், உடுபுடைவைகள் மற்றும் தளபாட வகைகளையும் அண்மையில் அன்பளிப்பாக வழங்கியது.

கழகத்தின் தலைவர் லயன்.எஸ். சிவபாலசுப்பிரமணியம் தலைமையில் லயன் டாக்டர் எஸ்.எஸ்.அருளானந்தம், லயன் கே.சற்குணதேவன் உட்பட ஏனைய உறுப்பினர்களும் இந்நிகழ்வில் பங்குகொண்டிருந்தனர்.

நாவற்குழி வீடமைப்புத் திட்டக் கிராமத்தினை சாவகச்சேரி லயன்ஸ் கழகம் ஒரு பராமரிப்புக் கிராமமாக இவ்வருடம் முதல் சுவீகரித்துள்ளமை குறிப்பிடத்தக்கதாகும். (க-16)

## சுனாமியால் பாதிக்கப்பட்ட

# தனியார் நிறுவனங்களை புனரமைக்க ஐரோப்பிய முதலீட்டு வங்கி நிதியுதவி

சுனாமி அனர்த்தம் காரணமாகப் பாதிக்கப்பட்ட தனியார் நிறுவனங்களைப் புனரமைக்கவென ஐரோப்பிய முதலீட்டு வங்கி 540 கோடி டொலர் கடன் வசதியை வழங்கியுள்ளது.

இதற்கான இரு ஒப்பந்தங்கள் நிதி திட்டமிடல் அமைச்சில் கைச்சாத்திடப்பட்டன.

இரண்டு கட்டங்களாக கடன் வசதிகள் வழங்கப்படும். சுனாமி அனர்த்தத்தினால் நேரடியாகப் பாதிக்கப்பட்ட தொழில் நிறுவனங்களுக்கு மத்திய வங்கியின் நிவாரணத்திட்டத்தின் கீழ் இரண்டு கோடி யூரோ முதல் கட்ட கடன் வசதி வழங்கப்படவுள்ளது.

இரண்டாவது கட்டத்தின் கீழ் சுனாமி அனர்த்தம் காரணமாக நேரடியாகவோ அல்லது நேரடியற்ற வகையிலோ பாதிக்கப்பட்ட நிறுவனங்களுக்கு 5 கோடி யூரோ கடன் வசதி வழங்கப்படும்.

இலங்கை அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி இந்தக் கடன் வசதியை நிர்வகிக்க இருக்கிறது.

(க-7)

## காட்சிப் பொருளாக கிடக்கும் குப்பைகள் சேகரிப்புத் தொட்டி

யாழ்.மாநகர வீதிகளில் சேகரிக்கப்படும் குப்பைகளை போட்டு வைப்பதற்காக யு.என்.டி.பி அமைப்பினால் யாழ். மாநகர சபைக்கு முதற்கட்டமாக வழங்கப்பட்ட 125 தொட்டிகளும் 2ஆம் கட்டமாக வழங்கப்பட்ட 130 தொட்டிகளும் இதுவரை உரிய இடங்களில் நிறுவப்படாமல் யாழ். மாநகர சபை முன்றலில் காட்சிப் பொருளாக வைக்கப்பட்டிருப்பதைக் கண்டு பொது மக்கள் கவலை தெரிவிக்கின்றார்கள்.

(து-133)

## இடமாற்றம்

(பருத்தித்துறை)

பருத்தித்துறை நகரசபைச் செயலாளர் திருமதி கமலாதேவி திருச்செல்வநாயகம் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு கடந்த 3ஆம் திகதி தொடக்கம் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை பிரதேச சபையில் முகாமைத்துவ உதவியாளராகக் கடமையாற்றிய திருமதி அருந்தவமலர் சிறிவிக்னேஸ்வரனும் வடமராட்சி வலயக் கல்வி அலுவலகத்திற்கு இடமாற்றம் பெற்றுப் பெறுப்பேற்றுள்ளார்.

(க-52)

# தேசிய பயிற்சிப் பாசறை

மக்கள் நலன்புரிச் சங்கமும் படையணிகளும் இணைந்து யாழ்.மாவட்டத்தில் உள்ள பாடசாலை மாணவர்களுக்கு தேசிய பயிற்சிப் பாசறையினை நடாத்தவுள்ளது.

இன்று தொடக்கம் 10ஆம் திகதி திங்கட்கிழமை வரை இப்பயிற்சிப் பாசறை கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் நடைபெறவுள்ளதாக மேலதிக ஆணையாளர் பி.சஞ்சித்குமார் தெரிவித்துள்ளார்.

இப்பயிற்சிப் பாசறையில் மெய்வல்லுநர் சம்பந்தமான போட்டிகள், தலைமைத்துவம், முதலுதவி, வீதி ஒழுங்கு, உள்ளகவிளையாட்டுக்கள் என பல்வேறு நிகழ்வுகளும் இடம்பெறும்.

(ச-133)

# இனங்காணப்படாத ஒருவகை காய்ச்சலினால் 4 பேர் மரணம்

(கொழும்பு)

காலியில் உள்ள கராப்பிட்டிய போதனா வைத்தியசாலையில் இனம்காணப்படாத ஒருவகைக் காய்ச்சலினால் பீடிக்கப்பட்டு சிகிச்சை பெற்றுவந்த நால்வர் உயிரிழந்துள்ளார்கள்.

உயிரிழந்த நால்வரும் கடந்த வாரம் இனம்காணப்படாத நிமோனியாக் காய்ச்சலுக்குள்ளாகி உயிரிழந்திருக்கலாம் என்று வைத்தியர்கள் சந்தேகிக்கின்றார்கள்.

இதேவேளை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு குறுகிய காலத்திற்குள் இவ்கள் உயிரிழந்திருந்தமை சந்தேகத்தை ஏற்படுத்தியிருப்பதாக வைத்தியசாலைப் பணிப்பாளர் தெரிவித்துள்ளார்.

இந்த சந்தேகத்துக்குரிய நோய் வைத்தியசாலையின் வேறு பிரிவுகளுக்கும் பரவியுள்ளதா என்பது குறித்த பரிசோதனைகள் இடம்பெறுவதாகவும் பணிப்பாளர் மேலும் தெரிவித்துள்ளார்.

(க-9)

## மக்கள் சேவையில் பருத்தித்துறை ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம்

ஆன்மீக ஈடேற்றத்துக்கு வழிகாட்டும் பருத்தித்துறை ஸ்ரீ ராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரமம் பல்வேறு இடர்பாடுகளின் மத்தியில் அல்லற்பட்டுக் கொண்டிருக்கும் யாழ்ப்பாண மக்களுக்கு வைத்திய உதவிகளைப் பெற்றுக்கொடுக்கும் முயற்சிகளிலும் ஈடுபட்டு வருகிறது.

புலோலி ஆதார வைத்தியசாலையின் செயற்பாடுகளைப் பற்றி மேற்படி சேவாச்சிரமத்தின் தலைவர் சுவாமி சித்ரூபானந்தா கடந்த மாசி மாதம் 11ஆம் திகதி இந்திய உயர் ஸ்தானிகரை அவரது உத்தியோக பூர்வ பணிமனையில் சந்தித்து எடுத்துக் கூறியதையடுத்து இந்திய உயர்ஸ்தானிகர் திருமதி நிருபமா மெனன்ராவ் அதே மாதம் 26ஆம் திகதி யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்து புலோலி ஆதார வைத்திய சாலையைப் பார்வையிட்ட பின் சேவாச்சிரமத்தில் சுவாமி சித்ரூபானந்தாவைச் சந்தித்து ஆகவேண்டிய உதவிகளைச் செய்வதாக வாக்களித்ததையடுத்து அவ்வைத்திய சாலைக்கு பல உதவிகள் செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

யாழ்ப்பாணத்தில் புதிதாகத் திறக்கப் பட்ட புற்றுநோய் வைத்தியசாலைக்கு கிடைத்துவரும் அரச உதவி போதுமானதாக இல்லை என்பதை சித்ரூபானந்தா இந்திய உயர்ஸ்தானிகருக்கு எடுத்துரைத்ததன் பயனாக அவரது வேண்டுகோளுக்கமைய சுவாமியின் முயற்சியால் யாழ்.புற்றுநோய் பிரிவின் பொறுப்பதிகாரி அத்தியாவசிய தேவைகள் குறித்து உயர்ஸ்தானிகருக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

கூடிய விரைவில் அக்கோரிக்கைகள் நிறைவேற்றப்படுமென சுவாமி சித்ரூபானந்தா நம்பிக்கை தெரிவித்தார். (து)

## பயனாளிகளுக்கு மரக்கன்றுகள் வழங்கல்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி உமையாள்புரம் பரந்தன் பிரதேசத்தில் 40 குடும்பங்களுக்கு பயன் தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன.

நேற்றுமுன்தினம் காலை 10.00 மணிக்கு தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் அனுசரணையுடன் ஒக்ஸ்பாம் நிறுவனத்தினால் உமையாள்புரம் கிராமத்தில் 20 குடும்பங்களுக்கு மா, பலா உள்ளிட்ட பயன்தரு மரக்கன்றுகள் உமையாள்புரம் கலையரசி முன்பள்ளி மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

இதேபோன்று நேற்று பகல் 11.00 மணிக்கு பரந்தன் பொது நோக்கு மண்டபத்தில் வைத்து 20 குடும்பங்களுக்கு பயன் தரு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுள்ளன. (க)

## நெடுந்தீவு - குறிகட்டுவான் அம்புலன்ஸ் படகுச் சேவை

(நல்லூர்)

நெடுந்தீவு - குறிகட்டுவானுக்கான நோயாளர் அம்புலன்ஸ் படகுச் சேவை விரைவில் ஆரம்பமாகவுள்ளது.

இச்சேவைக்காக ஒருலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா பெறுமதியான அம்புலன்ஸ் படகு கியூமெடிக்கா நிறுவனத்தினரால் எதிர்வரும் 11ஆம் திகதி காலை 7.00 மணிக்கு யாழ்.மாவட்ட அரச அதிபரிடமும், பிராந்திய மாகாண சுகாதாரப் பணிப்பாளரிடமும் கையளிக்கப்படவுள்ளது. (து-134)

## அரசியலமைப்புச் சபைக்கு உறுப்பினர்கள் நியமனம்

### சபாநாயகருக்கு ஜனாதிபதி கடிதம்

(கொழும்பு)

அரசியல் அமைப்புச் சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதற்கு தேவையான ஆலோசனைகளை உடனடியாக வழங்குமாறு ஜனாதிபதி மஹிந்தராஜபக்ஷ சபாநாயகரிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

நாட்டின் தலைவர் என்ற ரீதியில் அரசாங்க நடவடிக்கைகள் தொடர்பாக மக்களிடையே அதிருப்தி நிலைமை ஏற்படுவதற்கு விரும்பவில்லையென ஜனாதிபதி சபாநாயகருக்கு அறிவித்திருப்பதாக ஜனாதிபதி செயலகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அரசியலமைப்பு சபைக்கு உறுப்பினர்களை நியமிப்பதில் தாமதம் ஏற்பட்டுள்ளதால் பல நிர்வாகச் சிக்கல்களை எதிர்நோக்கவேண்டியிருப்பதாகவும் ஜனாதிபதி சபாநாயகருக்கு அனுப்பிய கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

இந்த நிலைமையினால் தேசிய பொலிஸ் ஆணைக்குழு, அரசசேவை ஆணைக்குழு, நீதிச்சேவை ஆணைக்குழு, மனிதவுரிமை ஆணைக்குழு முதலியன இயங்குவதில் தடைகள் ஏற்பட்டிருப்பதாகவும் ஜனாதிபதி அந்தக் கடிதத்தில் சுட்டிக்காட்டியுள்ளார். (து-9)

### விபரம் திரட்டல்

(நல்லூர்)

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவிலுள்ள இருபாலை தெற்கு கிராம சேவையாளர் பிரிவில் சொந்தக்காணி இல்லாது இரவல் காணிகளில் குடியிருப்பவர்களின் விபரங்களை அப்பகுதி கிராம சேவையாளர் திரட்டி வருகிறார். (க-134)

### வலைப்பந்தாட்டம்

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான வலைப்பந்தாட்டப் போட்டிகள் எதிர்வரும் 10,11ஆம் திகதிகளில் மு.ப. 8.30 மணிக்கு யாழ்.இந்து மகளிர் கல்லூரியில் நடைபெறும் என யாழ்.கல்வி வலய உடற்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (க)

### கரப்பந்தாட்டம்

யாழ்.கல்வி வலயப் பாடசாலைகளுக்கிடையிலான கரப்பந்தாட்டப் போட்டிகள் நாளை ஞாயிற்றுக்கிழமை மு.ப.8.30 மணிக்கு யாழ்.முத்துத்தம்பி மகாவித்தியாலயத்தில் நடைபெறும். (க)

### எழுவைதீவு - அனலைதீவுக்கு திரிபோஷா மா விநியோகம்

(நல்லூர்)

எழுவைதீவு மற்றும் அனலைதீவுக்கு திரிபோஷா மாவை பிரதேச சபையின் படகு மூலம் இலவசமாகக் கொண்டு செல்வதற்கு ஊர்காவற்றுறை உதவி அரசாங்க அதிபர் க.ஸ்ரீமோகனன் நடவடிக்கை எடுத்துள்ளார். (து-134)

## குழுநிலைப் போட்டிகளில் வெற்றிபெற்றோர் விபரம்

(காரைநகர்)

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் பதிவுசெய்யப்பட்ட கழகங்களிற்கிடையில் குழுநிலைப்போட்டிகள் நடைபெற்று வருகின்றன.

இவ்வாறு நடைபெற்ற போட்டிகளில் முதலாம் இரண்டாம் இடத்தினைப் பெற்ற கழகங்களின் விபரம் அறிவிக்கப்பட்டுள்ளது.

ஆண்களிற்கான கரப்பந்து போட்டியில் சோலையான் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினையும், அம்பாள் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தையும் பெற்றுள்ளன.

பெண்களிற்கான கரப்பந்த போட்டிக்ளில் கோவளம் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினையும், தங்கோடை விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளன.

ஆண்களிற்கான எல்லே போட்டியில் ஒளிச்சுடர் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினையும், அம்பாள் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தினையும், பெண்களிற்கான எல்லே போட்டியில் இளந்தென்றல் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினையும், அம்பாள் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தினையும்,

கிரிக்கெட் ஆட்டத்தின்போது கோவளம் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தினையும் சோலையான் விளையாட்டுக் கழகம் இரண்டாம் இடத்தினையும் உதைபந்தாட்டத்தில் அம்பாள் விளையாட்டுக் கழகம் முதலாம் இடத்தினையும் சோலையான் விளையாட் டுக்கழகம் இரண்டாம் இடத்தினையும், வலைப்பந்தாட்டத்தில் சோலையான் விளையாட்டுக்கழகம் முதலாம் இடத்தினையும், கோவளம் விளையாட்டுக்கழகம் இரண்டாம் இடத்தினையும் பெற்றுள்ளது.

ஏனைய மைதான சுவட்டு நிகழ்ச்சிகள் இம்மாத இறுதிக்குள் நடைபெறவுள்ளதாக காரைநகர் பிரதேச செயலக பிரிவு விளையாட்டு உத்தியோகத்தர் எஸ்.துரைசிங்கம் தெரிவித்துள்ளார். (க-246)

## புத்தாண்டுப் பண்டிகைக் காலத்தில் குற்றச் செயல்களைத் தடுக்க விசேட நடவடிக்கை எடுக்கப்படும்

(கொழும்பு)

தமிம், சிங்கள புத்தாண்டு பண்டிகைக் காலத்தில் அனுமதி பெற்ற மதுபானசாலைகளில் இடம்பெறும் குற்றச்செயல்களை தடுக்க விசேட கவனம் செலுத்தப்பட்டுள்ளதாக காவல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

இவ்வாறான இடங்களை சுற்றி வளைத்து தேடுதல் நடவடிக்கை மேற்கொள்ளுவதற்கு விசேட குழுக்கள் அமைக்கப்படவுள்ளன.

அத்துடன் பண்டிகைக்காலத்தில் மதுபானம் அருந்துவதற்கு முற்றுமுழுதாக தடைசெய்யப்படும்.

மேலும் மூடிகள் அகற்றப்பட்ட மதுபானப் போத்தல்களை விற்பனை செய்யவும் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

கடந்தகாலங்களில் இத்தகைய மோசடிகளில் ஈடுபட்ட மதுபானசாலைகளை பொது மக்களின் முறைப்பாட்டின் பேரில் சட்டத்தின் பிடியில் கொண்டுவர முடிந்துள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

மதுபான விற்பனைக்கு அனுமதிப் பத்திரம் பெற்றவர்கள் இவ்வாறு சட்டவிரோத செயல்களில் ஈடுபடுவது தொடர்பில் சுற்றிவளைப்பு பிரிவிற்கு தொலைபேசி மூலம் முறைப்பாடுகளை மேற்கொள்ளலாம்.

சுற்றிவளைப்பு பிரிவின் தொலைபேசி இலக்கம் 2300 -170 ஆகும். (க-9)

## புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள்

(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட ரயில் சேவைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன.

நேற்று முன்தினம் ஆரம்பிக்கப்பட்ட இச்சேவைகள் எதிர்வரும் 16ஆம் திகதி வரை இடம்பெறும்.

24 ரயில்கள் இத்தகைய விசேட சேவையில் ஈடுபட்டுள்ளன என ரயில்வே கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

இதேவேளை, இன்று முதல் 16ஆம் திகதி வரை விசேட பஸ் சேவைகளும் நடத்தப்படவுள்ளமை இங்கு குறிப்பிடத் தக்கது. (க-9)

## புத்தாண்டை முன்னிட்டு விசேட பஸ் சேவை!

(கொழும்பு)

தமிழ், சிங்கள புத்தாண்டை முன்னிட்டு விசேட பஸ் சேவைகளை நடத்த இலங்கை போக்குவரத்துச் சபை திட்டமிட்டுள்ளது.

நாட்டிலுள்ள பிரதான பாதைகளில் இந்த விசேட பஸ் சேவையை இன்று தொடக்கம் ஆரம்பிக்கவுள்ளதாக இலங்கை போக்குவரத்துச் சபை தெரிவித்துள்ளது.

ஏனைய சேவைகள் பிரதேச ரீதியில் உள்ள பஸ் டிப்போக்கள் ஊடாக மேற்கொள்ளப்படும். (க-9)

## பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளர் நாயகமாக ரங்க கலன்சூரிய நியமனம்

இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் பணிப்பாளராக ரங்க கலன்சூரிய நியமிக்கப்பட்டுள்ளார்.

பணிப்பாளர் நாயகமாக இருந்த கீத் பேர்னார்ட் பதவி விலகியதையடுத்தே இவர் அந்தப் பதவிக்கு நியமிக்கப்பட்டுள்ளார்.

ரங்க கலன்சூரிய உள்நாட்டிலும், சர்வதேச ரீதியிலும் 15 ஆண்டுகள் ஊடகத்துறையில் அனுபவம் பெற்றவர்.

இலங்கை பத்திரிகை நிறுவனத்தில் 2005 காலப்பகுதியில் இணைந்து கொண்ட இவர், இலங்கை இதழியல் கல்லூரி மூலம் பல பயிற்சித்திட்டங்களை ஆரம்பித்தவர்.

இலங்கை பத்திரிகை நிறுவனத்தின் கீழ் பத்திரிகை முறைப்பாட்டு ஆணைக்குழு (PCCSL), இலங்கை இதழியல் கல்லூரி (SLCJ) ஆகியன செயற்படுகின்றன. (க-7)

### ஞானச்சுடர் வெளிவந்துள்ளது

(யாழ்ப்பாணம்)

சந்நிதியான் ஆச்சிரம சைவகலை பண்பாட்டு பேரவையினால் வெளியிடப்படும் ஞானச்சுடர் மலரில் பங்குனி மாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. (க-9)

### 5ஆம் ஆண்டு நிறைவும் பரிசளிப்பு நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலய அறநெறிப்பாடசாலையின் 5ஆம் ஆண்டு நிறைவு விழாவும் வருடாந்தப் பரிசளிப்பு நிகழ்வும் ஆலய விசேட மண்டபத்தில் எதிர்வரும் 12ஆம் திகதி புதன்கிழமை பிற்பகல் 3மணிக்கு அதிபர் சமூகஜோதி கா.கணேசதாசன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ்விழாவில் முதன்மை விருந்தினராக மானிப்பாய் இந்துக்கல்லூரி அதிபர் ச.சிவணேஸ்வரனும், சிறப்பு விருந்தினர்களாக உடுவில் முருகமூர்த்தி வித்தியாலய அதிபர் எஸ்.பஞ்சாட்சரம், யாழ்.இந்து சமய அபிவிருத்தி உதவியாளர், த.பிரதீஸ்வரன் ஆகியோரும் கலந்துகொள்வார்கள்.

ஆலய பிரதமகுரு பிரம்மஸ்ரீ பரமேஸ்வர ஜெயக்குமார் குருக்கள் அருள் ஆசியுரையும், ஆலய தர்மகர்த்தா சபைத் தலைவர் த.சிதம்பரநடராஜா வாழ்த்துரையும் வழங்குவார்கள்.

போட்டிகளில் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு பரிசில் வழங்கல், ஆசிரியர்களைக் கௌரவித்தல், மாணவர்களது கலைநிகழ்ச்சிகளும் இடம்பெறும். (க)

### வழக்குகள் ஒத்திவைப்பு

(ஊர்காவற்றுறை)

கடந்த 5ஆம் திகதி ஊர்காவற்றுறை நீதிமன்றில் விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவிருந்த வழங்குகள் யாவும் எதிர்வரும் ஏப்ரல் 18ஆம் திகதி செவ்வாய்க்கிழமை வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளன. (க-72)

# இன்று ஒரு தகவல்

## மனைவியின் மனம்

உ ரோமாபுரியில் 2 ஆயிரத்து 500 வருடங்களுக்கு முன்னால் யாராவது திருமணம் செய்யாமல் இருந்தால் அது மிகவும் துணிச்சலான காரியம் எனக்கருதப்பட்டது. ஆமாம்! அப்படியும் ஒரு நேரம் இருந்தது!ஏன்தெரியுமா? திருமணம் செய்யாமல் பிரமச்சாரிகளாக வாழ்வோர் மீது கடுமையான அபராதம் விதிப் பார்களாம் அதனால் அபராதமா? திருமணமா? இது இரண்டில் எது சிறந்தது என்று முடிவு செய்து அதற்கு ஏற்றாற் போல் நடப் பார்களாம்.

இந்தக் காலத்தில் எது சிறந்தது. என்று முடிவெடுப்பது மிகவும் சிரமம் .சில நேரங்களில் திருமணம் சிறந்தது. என்று தோன்றும் சில நேரங்களில் அபராதம் சிறந்ததாகக் தோன்றும்.

அது இருக்கட்டும் ஒரு நல்ல கணவன் எப்படி இருக்க வேண்டும் என்று பெண்கள் எதிர்பார்க்கின்றனர் என்று சிலர் ஆராயச்சி செய்தனர். இத்தாலி, அமெரிக்கா, கனடா போன்ற நாடுகளில் அந்த நாட்டுப் பெண்களிடம் தனித்தனியாக அபிப்பிராயம் கேட்டு அவற்றைத் தொகுத்து வெளியிட்டிருக்கின்றனர்.

முதலில் மென்மை பற்றி இவர்கள் என்ன நினைக்கின்றனர்? தமது கணவன் வெளியில் வீரமும் உறுதியும் உள்ளவனாக இருக்கவேண்டும் தன் மனையிடம் இனிமை கலந்த மென்மை உள்ளவனாக இருக்கவேண்டும். இது தான் அவர்களின் எதிர்ப்பார்ப்பு. ஆனால் பலர் தம் வீரத்தை வீட்டு வாசற்படி தாண்டி வைதது்க்கொள்வது இல்லை. என்ன செய்வது?

எபபோ்தாவது ஒரு சில தடவை கணவன் மனைவியைப் பார்த்து நான் உன்னை மிகவும் நேசிக்கின்றேன் என்று கூற வேண்டு மென எதிர்பார்க்கின்றனராம்.

அடுத்தது மரியாதை! தமது கணவன் முரட்டுத்தனமாகவோ அலட்சியமாகவோ மரியாதைக் குறைவாகவோ நடந்து கொள்வதை எந்த மனைவியும் விரும்புவதில்லை. கணவன்மார் முணு முணுப்பது காதில் விழுகிறது! இப்போதே கூறிவிடுகின்றேன் இது மனைவியருக்கும் பொருந்தும் போதுமா?

அடுத்தது கருத்தறிதல்! மனைவியின் தேவைகளை அறிந்து கொண்டு அவரின் பிறந்த நாள் அன்று அவர்களுக்கு மிகவும் தேவைப்படும் பொருளை பரிசாகக் கொடுத்துப் பாருங்கள்! அதன் மதிப்பே தனிதான் மனைவியின் பெருந்தனமை யைப் புரிந்துகொண்டு அதற்குத் தகுந்ததுபோல் அன்பு செலுத்த வேண்டும்.

அடுத்தது நீதி! கணவன் தான் வீட்டுத்தலைவன் என்ற எண் ணத்தில் வீட்டுச் செலவுக்குக் கொடுக்கும் பணத்தில் சிக்கனம் காட்டக்கூடாது ஏனென்றால் பல மனைவிமாரின் மனக்குறை எனன தெரியுமா? தமது கணவன் தனது செலவுக்கு மட்டும் அதிகப் பணம் வைத்துக்கொள்கின்றார் என்பது தான்.

அடுத்தது நன்றியுடமை! பல மனைவிமார்கள் இது பற்றி என்ன கூறுகின்றனர் தெரியுமா? நானும் எனது கணவரும் வெளியே செல்லும் போது என் கணவர் என்னைப் பரிகாசம் செய்கின்றார் மற்றோர் முன்னிலையில் என்னில் குற்றம் கண்டு பிடிக்கின்றார். இப்படி பலர் மனவேதனைப் படுகின்றனர். தனது கணவன் என்றுமே தன்னை விட்டுக்கொடுக்க மாட்டார் என்னும் நம்பிக்கையை வளர்க்கவேண்டும். அப்படி இருந்தால் தான் இல்லற வாழ்வு இன்பமாக இருக்கும்.

அடுத்தது நேர்மை மனைவிக்குத் தெரியாத இரகசியம் சந்தேகத்தை உண்டாக்கி விடும். கணவன் தன்னிடம் பொய் கூறு கின்றான் என்னும் ஐயம் வந்தவுடன் அவனது எல்லாச் செயற்பாடுகளும் சந்தேகத்தை உண்டாக்கிவிடும் அதனால் உண்மையாகவும் நோர்மையாகவும் கணவன் நடந்து கொள்ளவேண்டியது அவசியம். ஆக இப்படி ஏழு விதமான ஆலோசனைகள் இந்த ஆராய்ச்சியின் மூலமாக நமக்குக் கிடைத்திருக்கின்றன. சாதாரண ஆராய்ச்சி இல்லை. சர்வதேச அளவில் நடந்து ஆராய்ச்சி.

ஒருவரையொருவர் செல்லமாக அழைப்பது எப்படித் தெரியுமா? இது ஊருக்கு ஊர் வித்தியாசப்படுகின்றது. லிதுவேனியாவில் "காட்டுமலரே" என்பார்கள் திபேத்தில் சின்னஞ்சிறுபன் றியே என்பார்கள். வியன்னாவில் சிறுநத்தையே என்று அழைப்பார்கள் செருவியாவில் வெட்டுக்கிளியே என அழைபபார்கள் யுகோஸ்லாவியாவில் "சின்னஞ்சிறு புல்லே" என்பார்களாம் இவற்றை சும்மா ஒரு தகவலுக்காகச் சொல்கின்றேன். சீரியஸாக எடுத்துக்கொண்டு என்னிடம் சண்டைக்கு வராதீர்கள்.

இன்றைய தகவலின் நீதி என்னவென்றால் குடும்பம் குதூகலமாக இருக்கவேண்டும். ஒருவரையொருவர் நன்கு புரிந்து கொண்டு நடக்க வேண்டும். சண்டை சச்சரவு இருக்ககூடாது என்பது தான்!

"எங்கள் வீட்டில் முன்பெல்லாம் தினமும் சண்டை செய்து கொணடிருப்போம் இப்போது ஒரு மாதமாக சண்டையே இல்லை" என்று பெருமையாகக் கூறினார் ஒருவர். அது எப்படி?" என்று கேட்டேன் அதற்கு அவர் "எனது மனைவி தனது தாய்வீட்டிற் குப் போய்விட்டார் அதனால் தான் " என்றார்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# ஜனாதிபதி மஹிந்தவுக்கான நட்ட ஈடு

# நீதிமன்றப் பதிவாளரிடம் கையளிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவுக்கு நட்ட ஈடாக வழங்கப்பட வேண்டிய இரண்டு இலட்சம் ரூபாய் நீதிமன்றப் பதிவாளரிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

மஹிந்தவுக்கு நட்டஈடு அளிக்குமாறு பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்ணான்டோ மற்றும் இரகசியப் பிரிவு பிரதிப் பொலிஸ் மா அதிபர் லயனல் குணதிலக்க ஆகியோருக்கு கடந்த 27 ஆம் திகதி உயர் நீதிமன்றம் உத்தரவிட்டது.

ஹெல்பிங் அம்பாந்தோட்டைக்குக் கிடைத்த பணத்தை அப்போது பிரதமராக இருந்த மஹிந்த ராஜபக்ஷ முறைகேடாகப் பயன்படுத்தினார் என குற்றம் சாட்டப்பட்டது. அதற்கமைய விசாரணை நடத்திய பொலிஸ் அதிகாரிகளுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்டிருந்த அடிப்படை உரிமை மீறல் மனுவை ஆராய்ந்த பிரதம நீதியரசர் சரத் என் சில்வா தலைமையிலான 3 நீதிபதிகள் குழு கடந்த 27 ஆம் திகதி அளித்த தீர்ப்பினூடாக இந்த நட்ட ஈட்டுத் தொகையை வழங்குமாறு உத்தர விட்டது.

இரகசியப் பிரிவு பொலிஸாரிடம் முறைப்பாட்டினைச் செய்த ஐக்கியக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் கபீர் ஹாசீமும் ஒரு இலட்ச ரூபாவை மஹிந்தவுக்கு வழங்குவேண்டுமென உத்தரவிடப்பட்டது.

எவ்வித அடிப்படையும் இன்றி மஹிந்தவுக்கு எதிராக பொய்யான முறைப்பாட்டைச் செய்தமை அது பற்றி சரிவர ஆராயாது விசாரணைகளைச் செய்தமையினூடாக இம் மூவரும் அடிப்படை உரிமை மீறல் குற்றச் சாட்டிற்கு இலக்காவதாகவும் நீதிபதிகள் தெரிவித்திருந்தனர்.

இந்த மூன்றுலட்ச ரூபா நட்ட ஈட்டுடன் வழக்குக் கான செலவாக இரண்டு லட்ச ரூபாவை செலுத்தும்படியும் அராசாங்கத்திற்குத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு)

## வன்செயல்கள் குறித்த விசாரணைகளை நடத்த பொலிஸாருக்கு விசேட அதிகாரம்

(கொழும்பு)

உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக விசாரணைகளை நடத்துவதற்கு சம்பந்தப்பட்ட பிரதேசங்களிலுள்ள பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரிகளுக்கு விசேட அதிகாரம் வழங்கப்பட்டுள்ளது.

வன் செயல்களில் ஈடுபட்டவர்கள் மீது தராதரம் பாராது சட்ட நடவடிக்கை எடுக்குமாறு பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரிகளுக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகத்திற்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் காமினி நவரட்ண தெரிவித்துள்ளார்.

நடந்து முடிந்த உள்ளூராட்சி மன்றத் தேர்தலின் போது இடம்பெற்ற வன்செயல்கள் தொடர்பாக 250 இற்கு மேற்பட்டவர்களை பொலிஸார் கைதுசெய்யதுள்ளனர். இதேவேளை, தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக 500க்கு மேற்பட்ட முறைப்பாடுகள் கிடைத்திருப்பதாக தேர்தல் வன்செயல்கள் தொடர்பாக கண்காணிக்கும் மத்திய நிலையம் தெரிவித்துள்ளது. (கு-9)

## பொதுமக்கள் பயன்பாட்டு ஆ.குழுவை நியமிக்குக !

### ஜோசப் மைக்கல் பெரேரா வேண்டுகோள்

(கொழும்பு)

சகல அத்தியாவசிய சேவைகளையும் உள்டக்கிய பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு ஒன்று அமைக்கப்படவேண்மென்று எதிர்க்கட்சியின் பிரதான அமைப்பாளர் ஜோசப் மைக்கல் பெரேரா தெரிவித்துள்ளார்.

நீர் ,மின் , எரிபொருள் உட்பட அத்தியாவசிய தேவையை கட்டுப்படுத்த முடியாத நிலையில் நுகர்வோர் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கி வருவதாக அவர் குறிப்பிட்டார்.

இலங்கை பொதுமக்கள் பயன்பாட்டு ஆணைக்குழு சட்டமூலத்தில் திருத்தம் செய்வது தொடர்பான யோசனை குறித்து பாராளுமன்றத்தில் நடைபெற்ற விவாதத்தில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

குறித்த ஆணைக்குழு சட்ட மூலத்தின் கீழ் மசகு எண்ணெய் தொழில்துறையும் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, அரசாங்கம் அத்தியாவசியப் பொருட்களை அடையாளம்காண தவறியுள்ளதாகவும் ஜோசப் மைக்கல் பெரேரா குற்றம் சுமத்தினார். (கு-9)

## இரத்ததானம் செய்பவர்களை பாராட்ட விசேட நடவடிக்கை

(கொழும்பு)

இரத்தானம் செய்ப்வர்களை பாராட்டும் முகமாக புதிய திட்டமொன்று தயாரிக்கப்பட்டு அமுல்படுத்தப் படவுள்ளது.

இரத்ததான தினத்தை முன்னிட்டு தேசிய இரத்தான சேவை இதனை ஒழுங்கு செய்துள்ளது.

இப்புதிய திட்டத்தின்படி பத்து தடவைகளுக்கு மேல் இரத்ததானம் செய்துள்ளவர்கள் பாராட்டப்படவுள்ளனர். தேசிய இரத்தான சேவை மற்றும் அதனைச் சார்ந்த வைத்தியசாலை மற்றும் இரத்த வங்கிகளுக்கு இரத்ததனம் வழங்கிய நபர்கள் இந்தப் பாராட்டுக்கு தகுதிபெற்றவர்கள் ஆவார்.

இரத்தானம் செய்தவர்கள் அதனை சான்று படுத்தும் ஆவணங்களை இலக்கம் 555 நாரகரன் பிட்டியில் உள்ள தேசிய இரத்தான சேவையின் காரியா லயத்திற்கு எதிர்வரும் 30 ஆம் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவேண்டும். (கு-9)

## வீடுகளை புனரமைக்க சுவிஸ் அரசு நிதியுதவி

(கொழும்பு)

சுனாமிப் பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களது பாதிக்கப்பட்ட வீடுகளை புனரமைக்கும் திட்டத்திற்கென இலங்கைக்கு சுவிஸர்லாந்து அரசு 8.5 மில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவியை வழங்கியுள்ளது. திருகோணமலை , மாத்தறை ஆகிய மாவட்டங்களில் கடற்தடை வலயத்திற்கு வெளியே சுனாமியால் சேதமடைந்த வீடுகளை புனரமைப்பதற்கு இந்த நிதி பயன் படுத்தப்படவுள்ளது.

அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ள இத்திட்டத்திற்கு நிதியுதவி வழங்குவதற்கான புரிந்துணர்வு உடன்படிக்கை கடந்த வருடம் ஏப்ரல் மாதம் 6ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டதாக நிதியமைச்சு தெரி வித்துள் ளது.

சுவிற்ஸர்லாந்து அரசின் நிதியுதவியுடன் இது வரை 8ஆயிரத்து 617 வீடுகள் புனரமைக்கப்பட்டுள்ளன.

கடற்தடை வலய தளர்வுக்குப் பின்னர் திருகோணமலை, மாத்தறை மாவட்டங்களில் சேதமடைந்த வீடுகளை புனரமைக்க அனுமதிக்கப்பட்டுள்ளதாக நிதியமைச்சு வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (கு-9)

# போலி விசா மூலம் ஆட்கடத்தல்

## விளையாட்டுத்துறை அமைச்சரிடம் விசாரணை

(கொழும்பு)

இலங்கையிலிருந்து போலி விசாக்கள் மூலம் வெளிநாடுகளுக்கு ஆட்கடத்தல் மோசடியை மேற்கொண்டு வந்தமை தொடர்பாக விளையாட்டுத்துறை அமைச்சர் ஜீவன் குமாரதுங்கவிடம் இரகசியப் பிரிவு பொலிஸார் விசாரணை நடத்தவுள்ளனர்.

இது தொடர்பாக கூறிய இரகசிய பொலிஸ் அதிகாரி ஒருவர் இந்த வழக்கு தொடர்பாக சந்தேக நபர் களிடம் பெறப்பட்ட வாக்கு மூலங்களின் அடிப்படையில் ஜீவன் குமாரதுங்கவிடமும் விசாரணை மேற்கொள் ளப்படும் என்றார்.

அண்மையில் நீதிமன்றில் இந்த வழக்கு தொடர்பான விசாரணை அறிக்கையைத் தாக்கல் செய்த இரகசியப் பிரிவு பொலிஸார் ஜீவன் குமாரதுங்கவுக்கு இம் மோசடியில் உள்ள தொடர்பை உறுதிப்படுத்தியிருந்தனர்.

அலஸ்காவுக்கு 79 பேரை அனுப்பி வைக்குமாறு தனது பணியாளர்களுக்கு அமைச்சர் உத்தரவிட்டதாகவும் அந்த அறிக்கையில் கூறப்பட்டிருந்தது.

விளையாட்டுத்துறை அமைச்சகத்துக்காக சேவையாற்றிய இந்து கீர்த்தி சுனில் திஸநாயக்க இம் மோசடி தொடர்பாக கைதுசெய்யப்பட்டார் .அவரிடம் நடத்திய விசாரணையில் விளையாட்டுத்துறை அமைச்சு ஊடாகவே ஆட்கடத்தல் மோசடி மேற்கொள்ளப்பட்டது தெரியவந்தது.

போலி விசாக்கள் மூலம் அனுப்பி வைக்கப்படும் நபர்களிடமிருந்து 8 இலட்ச ரூபாவுக்கு அதிகமாக தொகை பெற வேண்டாம் என்று அமைச்சர் தமக்கு அறிவுறுத்தியிருந்ததாகவும் அந் நபர் கூறியிருந்தார்.

இதனிடையே ஜீவன் குமாரதுங்கவை பதவி விலகுமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கோரியுள்ளதாகவும் கொழும்புச் செய்திகள் தெரிவிக்கின்றன. (கு)

## தேசிய பாடசாலைகளின் செயற்பாடுகளை கண்காணிக்க கல்வி அமைச்சு நடவடிக்கை

(திருகோணமலை)

வடக்கு-கிழக்கு மாகாணத்தில் இயங்கும் தேசியப் பாடசாலைகளின் செயற்பாடுகளைக் கண்காணிப்பதற்கும், ஒருங்கிணைப்பதற்குமென கல்வி நிர்வாக சேவையின் சிரேஷ்ட அதிகாரிகளைக் கொண்ட விசேட குழு ஒன்றை கல்வியமைச்சு நியமித்துள்ளதாக மாகாணக் கல்விப் பணிப்பாளர் ஆர். விசாகலிங்கம் தெரிவித்தார்.

தேசிய பாடசாலைகளுக்கான மாவட்ட இணைப்பாளர்களென அழைக்கப்படும் இவர்கள் , இந்தப் பாடசாலைகளின் சகல வித பிரச்சினைகள் தொடர்பாகவும் மாகாண மற்றும் மத்திய கல்வியமைச்சுக்களுக்கு அறிவிப்பதுடன், மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பாக பரிந்துரைகளையும் செய்வார்களென்று அறிவிக்கப்படுகிறது.

வடக்கு-கிழக்கு மாகாணத்தல் 32 தேசியப் பாடசாலைகள் உள்ளமை குறிப்பிடத்தக்கது. (கு-7)

# உலக பயங்கரவாதத்திற்கு இலங்கை துணைபோகின்றதா?

ஆசியாவின் பெரும் இரும்புத் திரை வல்லரசு நாடான சீனாவும் மிகவும் ஆபத்தான நண்பன் என்று அமெரிக்க உளவுத் துறையால் வர்ணிக்கப்படும் பாகிஸ்தானும் இலங்கையைத் தமது கிடுக்கிப் பிடிக்குள் இறுக்கிக்கொண்டுள்ளன என்பதை அண்மைக்கால நிகழ்வுகள் எடுத்துக்காட்டுகின்றன.

தென் இந்தியாவில் இடம்பெறும் இஸ்லாமிய தீவிரவாத நடவடிக்கைகளுக்குக் கொழும்பிலுள்ள பாகிஸ்தான் தூதரகம் காரணமா என்ற சந்தேகம் இந்திய புலனாய்வுத்துறை வட்டாரங்களில் எழுந்துள்ளன.

அதுமட்டுமன்றி கிழக்கிலங்கையில் ஜிகாத் குழுக்களின் நடவடிக்கைகள் தீவிரமடைகின்றன என்ற குரல் உள்நாட்டிலும் எதிரொலிக்கும் நிலையில் பாகிஸ்தானுக்கான ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் பயணம் உற்று நோக்கப்படுகிறது.

பொருளாதார வர்த்தக அபிவிருத்தி தொடர்பான உயர்மட்ட பேச்சுக்களில் கலந்துகொள்ளவென சென்றிருந்த மஹிந்த ராஜபக்ஷ தலைமையிலான குழுவில் எந்த சம்பந்தமுமில்லாத சமூக நலன்கள் அபிவிருத்தி அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவும் இணைக்கப்பட்டிருப்பது அரசதூதுக் குழுவின் பயணத்தின் நோக்கம் தொடர்பான சந்தேகத்தை மேலும் வலுப்படுத்துகின்றது.

இந்த நிலையில் தான் இலங்கையில் பாகிஸ்தான் உளவுத்துறையின் தலையீடுகள் அதிகரித்திருப்பது தொடர்பான பல புதிய தகவல்கள் வெளிவந்த வண்ணம் உள்ளன.

பாகிஸ்தான் தென்னிந்தியாவில் தீவிரவாத தாக்குதல்களை முடுக்கி விட்டிருப்பதை உறுதிப்படுத்திய இந்திய புலனாய்வுத்துறையும் மும்முரமாக முயன்று வருகின்றது.

தெற்காசியாவில் இஸ்லாமிய தீவிரவாத நடவடிக்கைகளின் முன்னோடியும் சூத்திரதாரியுமாக கருதப்படும் பாகிஸ்தானின் உளவுத்துறையான ஐஎஸ்ஐ தற்போது தெற்காசிய அரங்கிலும் உலக மட்டத்திலும் பெரும் சவாலாக மாறியிருக்கிறது.

பாகிஸ்தான் உளவுத்துறையின் மூத்த அதிகாரியும் ஜிகாத் அமைப்புக்களுக்கு ஆட் திரட்டி வலுவூட்டி நெறிப்படுத்தும் விற்பன்னரான கேணல் பஷீர் வலி மொகமது இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராக நியமனம் பெற்ற போது இந்த விவகாரம் புதிய பரிமாணம் கொண்டது.

### யார் அந்த பஷீர் வலி மொகமது?

1950ஆம் ஆண்டுகளில் பிரித்தானிய இராணுவ அதிகாரியான மேஜர் ஜெனரல் கவ்தோமால் தொடக்கி வைத்த ஐஎஸ்ஐ இன்று உலக அமைதிக்குப் பெரும் சவாலாக மாறியிருக்கிறது.

1960 ஆம் ஆண்டுகளில் பாகிஸ்தானின் நலன்களை கவனித்துக்கொள்ளும் பணியை அது மேற்கொண்டது.

உள்நாட்டிலும் வெளிநாட்டிலும் புலனாய்வுத் தகவல்களைப் பெற்றுக்கொள்வது முப்படையினருக்குமிடையே புலனாய்வுத் தகவல்களைப் பரிமாறிக்கொள்வது ஊடகங்களின் போக்கை அவதானித்துக்கொள்வது போன்ற நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்த ஐஎஸ்ஐ காலப்போக்கில் பாகிஸ்தானின் ஆட்சியில் ஆட்சி நடத்தும் வலுவான கட்டமைப்பாக மாற்றம் கண்டது.

அதிபருக்கோ தலைமை அமைச்சருக்கோ அன்றி எந்தவொரு தலைமைக் கட்டமைப்புக்கோ பதில் கூற வேண்டிய அவசியமின்றி தன்னிச்சையாக செயற்பட்டுவரும் ஐஎஸ்ஐ கட்டுப்படுத்தும் அதிகாரம் எவருக்கும் கிடையாது என்பதே யதார்த்தம்.

இது ஐஎஸ்ஐ ஊழல் மோசடியிலும் போதைப்பொருள் வர்த்தகம் மற்றும் ஆட்கடத்தல் போன்ற சட்டவிரோத நடவடிக்கைகளிலும் ஈடுபட வழிவகுத்தது.

ஆப்கானிஸ்தானிலும் இந்தியாவிலும் தாக்குதல் நடவடிக்கைகளை தொடுவதற்கு இவ்வாறான சட்டவிரோதமாக குவிக்கப்பட்ட பணமே பயன்படுத்தப்படுகிறது.

### ஐஎஸ்ஐ யின் செயற்பாடுகள்

ஜிக்ஸ் (JIX - Joint Intelligence X) என்றழைக்கப்படும் ஓர் கூட்டு புலனாய்வுப் பணிமனையை தலைமைச் செயலகமாகக் கொண்டு இயங்கும் ஐஎஸ்ஐ யின் பத்து பெரும் பிரிவுகளிலும் 10 ஆயிரத்துக்கும் மேற்பட்டவர்கள் கடமையாற்றுகிறார்கள்.

ஜிப் அல்லது (JIB - Joint Intelligence Bureau) என்றழைக்கப்படும் பிரிவு ஐஎஸ்ஐ யின் மிகவும் சக்தி வாய்ந்த பிரிவாகும்.

மூன்று முக்கிய உபபிரிவுகளைக் கொண்டுள்ள இந்தப் பிரிவானது உள்நாட்டிலும் வெளிநாட்டலும் மேற்கொள்ள வேண்டிய அரசியல் நிலைப்பாட்டைத் தீர்மானிப்பதுடன் அதற்கு உகந்த சூழ் நிலையை உருவாக்குதலில் கவனம் செலுத்துகிறது.

இந்தியாவின் வடமுனையில் ஜம்மு கஷ்மீர் பகுதியில் ஊடுருவல் நடத்தி ஆயுதங்கள் விநியோகித்துப் பரப்புரை மற்றும் தாக்குதல் நடவடிக்கைகளை மேற்கொள்வதை ஜின் எனப்படும் (JIN - Joint Intelligence/ North) பிரிவிடம் ஒப்படைக்கப்பட்டிருக்கிறது.

இது தவிர வெளிநாடுகளில் உளவு நடவடிக்கையில் ஈடுபடும் பிரிவு, தீவிரவாத நடவடிக்கைகளை மேற்கொள்ளும் ஜிகாத் உறுப்பினர்களுக்கு தகவல்கள் வழங்கி பாதுகாப்பதற்கு என்ற தொடர்பகப் பிரிவு போன்ற பல்வேறு பிரிவுகள்ளை ஐஎஸ்ஐ கொண்டிருக்கிறது.

இவை எல்லாவற்றிற்கும் மேலாக இரசாயன ஆயுதங்கள் சேகரிப்புக்கும் வெடிமருந்துகள் விநியோகத்திற்கும் தனித்தனி பிரிவுகளை ஐஎஸ்ஐ அமைத்திருக்கிறது.

சீனா, ஆப்பானிஸ்தான், பங்களாதேஷ், நேபாளம் மற்றும் முன்னைய சோவியத் ஒன்றியத்தின் முஸ்லீம் நாடுகளில் தீவிரமாகச் செயற்பட்டுவரும் ஐஎஸ்ஐ யின் பிரிவான JCIB (Joint Counter Intelligence Bureau) வின் கட்டுப்பாட்டின் கீழ் இலங்கை வீழ்ந்து விட்டதா என்ற சந்தேகம் தற்போது அனைத்துலக பயங்கரவாத தடுப்புப் புலனாய்வு அதிகாரிகள் மத்தியில் எழுந்துள்ளது.

பாகிஸ்தானின் நகர்வுகளும் மிகவும் நெருக்கமான உறவுகளைப் பேணி வரும் பாகிஸ்தான் உளவுத்துறைக்கு ஏற்ற வகையில் சீனாவும் இலங்கை விவகாரத்தில் மூக்கை நுழைக்கின்றது.

மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரரும் அவரது ஆலோசகருமான போதகாய ராஜபக்ஷ மேற்கொண்டிருந்த சீனப்பயணம் தொடர்பான செய்திகளை வெளியிட்ட ஆங்கில ஊடகமொன்றின் ஆசிரியர் இலங்கை புலனாய்வுத்துறையின் தீவிர விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

### பாகிஸ்தானின் தந்திரோபாயம்

தமிழீழ விடுதலைப்புலிகளுடன் நியாயமான பேச்சு நடத்தி நிரந்தர சமாதானத்தை நிலைநாட்டுவதற்கு மறுத்து வரும் இலங்கை அரசாங்கம் இராணுவத் தீர்வையே விரும்புகிறது என்ற உண்மையை நன்கு புரிந்துகொண்டிருக்கும் பாகிஸ்தான் அதற்கு ஏற்றவகையில் நகர்வுகளை மேற்கொண்டு தனது இலக்கை நெருங்கி வருகிறது.

இந்தியாவின் வடமுனை பகுதியான சச்சரவு மிக்க ஜம்மு கஷ்மீர் பகுதியில் தாக்குதல் நடத்துவதற்கு இஸ்லாமிய தீவிரவாதிகளுக்கு துணைபோவதுடன் அஸாம், பிகார், ஜார்கந்த், நாகலாந்த் மற்றும் சண்டிகார் மாநிலங்களிலும் இஸ்லாமிய தீவிரவாதத்தை ஊக்குவித்து வரும் ஐஎஸ்ஐ அண்டை நாடுகளான பங்களாதேஷ் தலைநகரம் டாக்காவிலிருந்தும் நேபாளத் தலைநகரம் காத்மண்டுவிலிருந்தும் இந்திய அரசுக்கு நெருக்கடிகளை ஏற்படுத்திவந்திருக்கிறது.

இருந்தபோதிலும் இந்தியாவின் தென்முனை நாடான இலங்கையிலும் மையம் கொண்டு இந்தியாவில் தாக்குதலை நெறிப்படுத்துவதே ஐஎஸ்ஐயின் நீண்ட காலத்திட்டமாக இருந்து வந்திருக்கிறது.

1991ஆம் ஆண்டில் யாழ்.குடாநாட்டை விடுதலைப்புலிகளிடமிருந்து கைப்பற்றுதற்கு இலங்கை அரச படைத்தரப்புக்கு இறுதி நேர உதவிகளை வழங்கியதன் மூலம் நாட்டை தனது பொறிக்குள் சிக்க வைத்தது.

யாழ். குடாநாட்டை வெற்றி கொள்வதற்கு பாகிஸ்தானே காரணம் என்பதை நன்றியுடன் நினைவு கூர்ந்த முன்னாள் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க இந்த உதவிக்கு எந்த கைமாறும் செய்யத் தயார் என்று வழங்கிய வாக்குறுதியை பாகிஸ்தான் கெட்டியாகப் பிடித்துக்கொண்டது.

இலங்கையை பாகிஸ்தான் உளவுத்துறையின் பொறிவலையில் சிக்க வைப்பத்தில் பெரும் பங்காற்றி வருபவர் அந்த நாட்டுக்கான தூதுவராக தற்போது கடமையாற்றி வரும் பஷீர் வலி மொகமது என்பவரே.

இஸ்லாமிய தீவிரவாத அமைப்புக்களில் ஒன்றான லக்ஷர் ஈதொய்பா அமைப்புடன் மிக நெருக்கமான தொடர்புகளைப் பேணிவருவதுடன் ஏனைய ஜிகாத் அமைப்புக்களை விரிவுபடுத்துவது ஆட் திரட்டுவது நிதி மற்றும் ஆயுதங்கள் வழங்கி நெறிப்படுத்துவதில் நிபுணத்துவமிக்க கேணல் பஷீர் வலி மொகமது 1990 ஆம் ஆண்டுகளி ் கொழும்பு தூதரகத்தின் புலனாய்வு நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவராக நியமிக்கப்பட்டிருந்தார்.

இந்த வேளையில் தமிழ்நாட்டில் ஜிகாத் அமைப்பைத் தோற்றுவிப்பதில் வெற்றிகண்டு அங்கு அல் உம்மா என்ற அமைப்பை ஏற்படுத்தியிருந்தார்.

தனது முன்னைய பதவிக் காலத்தில் கிழக்கிலங்கையில் உள்ள இஸ்லாமிய அமைப்புக்களுடன் அக்கறையான தொடர்பை ஏற்படுத்திய பஷீர் வலி மொகமத் வறுமையில் வாடிய முஸ்லிம் இளைஞர்களுக்கு புலமைப் பரிசில்கள் வழங்கி பாகிஸ்தானுக்கு அனுப்பி வைத்திருந்தார்.

இலங்கை முஸ்லீம்களுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்தி வந்த பஷீர் தொடர்ந்து லண்டன் தூதரகத்தில் புலனாய்வு நடவடிக்கைகளுக்காக அனுப்பி வைக்கப்பட்டிருந்தார்.

லண்டனில் வாழும் இஸ்லாமிய இளைஞர்களை திரட்டுவதில் ஈடுபட்டிருந்த பஷீர் லக்ஷர் ஈ தொய்பா உட்பட பல இஸ்லாமிய அமைப்புக்கள் பிரித்தானியாவினால் தடைசெய்யப்பட்டதைத் தொடர்ந்து இஸ்லாமாபாத்துக்குத் திருப்பி அழைக்கப்பட்டார்.

பாகிஸ்தானின் ஜிகாத் அமைப்புக்களான ரபிலிகி ஜமாத் (ரிஜே), ஹர் கத் - உல் - முஹைறதீன் (எச் யு எம்), ஹர் கத் உல் ஜிகாத் அல் இஸ்லாமி (எச் யு ஜேஐ) மற் றும் ஜய்ஷ் இ மொகமத் (ஜெம) ஆகியவற்றை விரிவுபடுத்துவதில் ஈடுபட்டிருந்த பஷீர் வலி மொகமத் இலங்கையில் போர் நிறுத்த ஒப்பந்தம் கைச்சாத்தானதும் புதிய தூதுவராக மீண்டும் கொழும்புக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

இலங்கைத் தூதுவர் பதவியை பஷீர் வலி ஏற்றுக்கொண்ட பின்னர் கிழக்கிலங்கையில் திரைமறைவு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டதாக இந்திய புலனாய்வுத்துறை வட்டாரங்கள் சுட்டிக்காட்டுகின்றன.

தென்னிந்தியாவின் தகவல் தொழில்நுட்ப நகரமான பெங்களூரில் 2005 ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 28ஆம் திகதி மேற்கொள்ளப்பட்ட தீவிரவாதத் தாக்குதலைத் தொடர்ந்து விசாரணைகள் பல புதிய தகவல்களை வெளிச்சத்துக்குக் கொண்டு வந்திருக்கின்றன.

ஆந்திர மாநிலத்தில் சந்தேகத்தின் பேரில் கைதான லக்ஷர் இ தொய்பா உறுப்பினர்களிடமிருந்து பெறப்பட்ட தகவல்களின் பிரகாரம் மத்திய கிழக்கில் துபாய், ஓமான், கட்டர் போன்ற நாடுகளுக்குத் தொழில் புரியச் செல்லும் தமிழக கேரள மற்றும் ஆந்திர மாநில இஸ்லாமிய இளைஞர்களைத் தீவிரவாத நடவடிக்கையில் ஈடுபடுத்தும் நடவடிக்கையில் ஐஎஸ்ஐ ஈடுபட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இலங்கையின் முஸ்லீம் சமூகத்தில் மத அமைப்புக்களுக்கு ஊடாக ஊடுருவியிருக்கும் பஷீர் வலி முகமது கராச்சியிலுள்ள பைனோி மதராஸி கல்விக்கூடத்தில் மதக் கல்வி பெறும் தோரணையில் பல நூற்றுக்கணக்கான கிழக்கிலங்கை இளைஞர்களை அனுப்பி வைத்திருப்பதாகக் கூறப்படுகிறது.

இது தவிர கடவுச் சீட்டுக்கள் இல்லாத நிலையிலும் பல நூற்றுக்கணக்கான இஸ்லாமிய இளைஞர்கள் பாகிஸ்தானின் தேசிய விமான சேவையான பி ஐ ஏ விமானம் மூலம் கராச்சிக்குக் கொண்டு செல்லப்படிருப்பதாக காஞ்சன் குப்தா என்ற ஆய்வாளர் தெரிவிக்கின்றார்.

தென் இந்தியாவில் உளவு நடவடிக்கைகளின் போது பெறப்படும் தகவல்கள் மற்றும் ஆவணங்களை பாகிஸ்தானுக்கு அனுப்பிவைக்கும் பரிமாற்ற தளமாக கட்டுநாயக்க விமானத் தளத்தை ஐஎஸ்ஐ பயன்படுத்துவதாகவும் இந்திய உளவுத்துறை சந்தேகம் கொண்டுள்ளது.

### முஸ்லிம்களுக்கென தனிப்படையை உருவாக்க உதவிய பாகிஸ்தான்

விடுதலைப்புலிகளுடன் போர் புரிய எத்தனிக்கும் இலங்கை அரசாங்கத்தை வளைத்துப் போட்டிருக்கும் பாகிஸ்தான் உளவுத்துறையின் ஆலோசனையின் பேரிலேயே முஸ்லீம்களுக்கென்று தனிப் படைப்பிரிவு ஆரம்பிக்கும் திட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது என்ற கருத்தும் நிலவுகிறது.

இராணுவத்தினருக்குப் பயிற்சியளிப்பது என்ற போர்வையில் ஜிகாத் அமைப்புக்களுக்கு பகிரங்க பயிற்சி வழங்க ஐஎஸ்ஐ திட்டமிட்டுள்ளது என்றும் புலனாய்வு அவதானிகள் கூறுகிறார்கள்.

நன்றி இணையத்தளம்

அமெரிக்காவுக்குப் பெரும் சவாலாக இன்னமும் ஆப்கானிஸ்தானில் இயங்கி வரும் தலிபான் அமைப்புடன் நெருங்கிய தொடர்புகளை பேணிவரும் ஐஎஸ்ஐ யின் முன்னாள் இயக்குனர் லெப்.ஜெனரல் மொகமத் அகமத் மற்றும் லக்ஷர் இ தொய்பா அமைப்பு உட்பட அனைத்து பாகிஸ்தானிய ஜிகாத் அமைப்புக்களின் விரிவாக்க நடவடிக்கைகளுடன் தொடர்புடையவரும் இலங்கைக்கான பாகிஸ்தான் தூதுவராக கடமையாற்றுபவருமான பஷீர் வலி மொகமதுவின் நடவடிக்கைகள் இலங்கையை ஆபத்தான பாதையில் இழுத்துச் செல்கின்றன.

இதனால்தான் உலகப் பயங்கரவாதத்திற்கு துணைபோகும் நாடு என்று இலங்கையும் அடையாளம் காணப்படுமோ என்ற கேள்வி தற்போது சர்வதேசத்தின் மத்தியில் எழுந்துள்ளது.

## சீனியின் விலை அதிகரிப்பை கட்டுப்படுத்த நடவடிக்கை

(கொழும்பு)

நாட்டிற்குத் தேவையான சீனியை வெளிநாடுகளிலிருந்து இறக்குமதி செய்ய வருடாந்தம் 12 மில்லியன் ரூபா நிதி செலவிடப்படுகிறது. வருடாந்தம் 5 இலட்சத்து 50 ஆயிரம் தொன் சீனி தேவைப்படுகிறது.

பெலவத்த சீனித் தொழிற்சாலை மூலம் 60 ஆயிரம் தொன் சீனி மட்டுமே உற்பத்தி செய்யப்படுகிறது.

சுமார் 35 ஆயிரம் குடும்பங்கள் இத்தொழிலை ஜீவனோபாயமாகக் கொண்டுள்ளன. வெளிநாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் சீனிக்கான செஸ்வரி மூலம் தேவையான உபகரணங்களைப் பெற்று, உள்ளூர் உற்பத்திக்குப் பல்வேறு வகையிலும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படவுள்ளன.

இறக்குமதிக்கான செஸ்வரியை மேலும் அதிகரிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கிராமிய பொருளாதார ஊக்குவிப்புத் திட்டத்தின் மூலம் சீனி உற்பத்தி கரும்புச் செய்கை நடவடிக்கைகளை முன்னேற்றுவதற்கான திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன.

கரும்பு ஆராய்ச்சி நிறுவனம் ஒன்றை நிறுவி இத்திட்டத்தை முறையாக முன்னெடுக்கவும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. (க-7)

# செல்லப்பசுவாமிகளின் திருவருள் பெற்ற யோகசுவாமிகள்

**யோகர் சுவாமிகளின் 42 ஆவது குருபூசை தினத்தையொட்டி இக்கட்டுரை வெளியாகிறது.**



**யோகசுவாமிகளது நாற்பத்திரண்டாவது குருபூசை பங்குனித் திங்கள் இருபத்தைந்தாம் நாள் சனி வாரமாகிய (8.4.2006) இன்றைய தினம் சிவதொண்டன் நிலையத்தில், அன்பர்கள் ஈந்த பொருள் கொண்டு வாங்கிய காணியில் அமைந்த இல்லத்தில் கொண்டாடப்படுகிறது. இன்று அம் மண்டபத்தில் நற்சிந்தனை முற்றோதலும் நுண்பொருள் விளக்கமும் நிகழும்.**

**திருவருள் வழிகாட்டலால் குடிபுகும் அவ்வில்லத்தின் புராண மண்டபத்தில் மகேஸ்வர பூசையும் நடைபெறும்.**

சுவாமிகள், அவர் தம் குருமணியான செல்லப்பதேசிகரை 'ஏட்டில் எழுதிக் காட்ட ஒண்ணாதவன்' எனக் கூறினார். சுவாமிகளைப் பற்றி எழுதக் கூடியவர் எவரும் இலர். ஆயினும் 'சொல்லற்கரியானைச் சொல்லி' என்றோர் திருவாசகம் உள்ளதல்லவா!

சுவாமிகள் தம்மைப் 'பிறவாதவன் இறவாதவன்' என்று தமது சொந்தக் கையெழுத்தில் குறிப்பிட்டிருக்கிறார். அவர் 1872 ஆம் ஆண்டில் பிறந்து 1964ஆம் ஆண்டில் திருவடிக் கலப்புற்றாரென்பது உலக வழக்கு.

மாவிட்டபுரத்திலே பிறந்த அவர் சிறு வயதிலேயே தாயாரை இழந்து கொழும்புத் துறையில் வாழ்ந்த முத்துப்பிள்ளை எனும் மாமியாரது அரவணைப்பில் வளர்ந்தார்.

அந்நாளில் 'அண்டாத ஒருவரை' பூவரச மரத்தின் கிளை பிடுங்கி துண்டி மயானத்தினூடாக உரப்பிக் கலைத்ததுண்டு. பாடசாலைப் படிப்பினை முடித்துக்கொண்ட பின்னர் நீர்ப்பாசனத் திணைக்கள இரணைமடுக்குளத் திட்டத்தில் பண்டக சாலைக் காப்பாளராகப் பணிபுரிந்தார். ஆறுதலான அவ்வுத்தியோகமும் கிளிநொச்சிப் பகுதியின் ஆரணியச் சூழலும் அவருக்குப் பிடித்தமாயிருந்தன. அந்நாளில் உண்மை நூல்கள் பலவற்றைப் படித்தார்.

பிறக்கும் குழந்தையின் பொருட்டு அன்னையின் மார்பில் பால் நிறைக்கும் திருவருள், தீவிர தரமான பக்குவரின் பொருட்டுக் குருபரனாக நல்லூர்த் தேர் முட்டிப்படியில் வீற்றிருந்தது. செல்லப்பன் என்னும் நாமம் பூண்ட அம் மூர்த்தத்தைப் பலரும் பைத்தியக்காரன் என்று இகழ்ந்தனர். செல்லப்பமூர்த்தியும் தம் விசர் வேடத்தை நன்றாகவே நடித்தார். ஆனால் அவரோ பாரறியாத பைத்தியக்காரன். பேரறிவாளன், பாவலர், நாவலர் யாரையும் பதறச் செய்யும் பரிபாசைக்காரன். செந்தமிழ் நாவலன். காமக்குரோத மோகங் கழிந்தவர். விருப்பு வெறுப்பை வேரறப் பறித்தவர். ஓதாதே வேதம் உணர்ந்தவர். நால்வேதம் நவில்வாயான். கற்றோரும் அறியாத சீரான். கருணை பூத்த திருமுகத்தான். எந்த வேளையும் 'ஓம்' எனச் சிந்தை தன்னிலே செப்பிக்கொண்டே வந்த பேருக்கு வாழ்வையளிப் பவர். அவர் 'ஈனப் பிறப்பை நீக்கும் எழில் ' அறிந்த ஞானதேசிகர். மார்க்கண்டர்க்காக மறலியை உதைத்தவரும் குருந் தமரத்தடியில் குருவாக வீற்றிருந்தவரும் எவரோ அவரே தேர்முட்டிப் படியிலும் குருவாக வீற்றிருந்தார்.

செல்லப்பரைக் குருவாகக் கொண்டொழுகிய சிலர் கொழும்புத்துறையில் இருந்தனர். அவரைக் கொழும்புத்துறையாரின் சுவாமி எனச் சிலர் கூறியதுமுண்டு. விடுமுறையின் போது ஊர்வந்த சிவயோகச் சிங்கம் கொழும்புத்துறையாருடன் கூடிச் செல்லப்பரைத் தரிசிக்கச் சென்றார். அவரைக் கண்ணுற்றதும் செல்லப்பர் 'ஆரடா நீ' என்று அதட்டினார். அன்றே செல்லப்பன் மாணாக்கனான செல்வச் சிவயோகர் குருநாதன் அருள்பெற்றார். 'ஆரடாநீ' என்பதை அடுத்து 'தேரடா உன்', 'தீரடாபற்று', 'பாரடாவெளியில்' என்ற ஞான மொழிகளை அருளினார். சில நாளில் உத்தியோகம் முதலிய யாவற்றையும் உதறித் தள்ளிவிட்டு செல்லப்பரே தனிச்சரண் என்று சார்ந்தார். செல்லப்பர் தம்மைச் சரணடைந்த சீடருக்கு 'ஒரு பொல்லாப்புமில்லை', 'எப்பவோ முடிந்த காரியம்', 'நாமறியோம்', 'முழுதும் உண்மை' எனும் பெரும் பெயர்களைத் தேசிகர் உபதேசித்தார். இப் பெரும் பெயர்களின் சார்பு வாக்கியங்களான 'ஒரு குறையுமில்லை', 'நூதனமொன்றுமில்லை', 'அப்படியேயுள்ள காரியம்', 'முடிந்த முடிபு', 'ஆரறிவார்', 'எல்லாம் சிவரூபம்' என்பவற்றை அறிவுறுத்தினார். 'சுட்டிறந்து நில்', 'நாமே நாம்', 'அது நாம்', 'இருந்துபார்', 'தேடாமல்தேடு', 'ஏது மொன்றற நில்', 'ஒன்றும் நீயல்லை' ஆகிய அனேகசின் மொழிகளை அருளிச் செய்தார்.

அவரை அன்னை போல ஆதரித்ததுடன் காலனெனக் கறுத்துச் சீறியும் அறிவு புகட்டினார். அன்பு நெறியும் அருள் நெறியும் காட்டினார். வாசியோகம் ஆகிய யோக நெறிமுறையெலாம் விளக்கினார். சீடரைச் சும்மா இருத்தீதுதற்காக சோதனை பல புரிந்தார். தானாகச் செய்வதற்குச் சதுர்வித உபாயங்களையும் கையாண்டார். செல்லப்பர் ஆடிய அருளாடலிலே ஞான வித்தையின் நுட்பங்கள் யாவும் செறிந்திருக்கின்றன.

ஞானவித்தை போதுமளவு புகட்டிய பின் தேரடியிலிருந்து தவமியற்றுமாறு பணித்தார். தவம் நிறைவுற்ற பொழுதில் பல்துலக்கும் குச்சியுடன் நின்ற சீடரைத் தேசிகர் தாக்கறமில்லாது தாக்கினார். அத் தாக்குதலைத் தாங்காது கால்போன போக்கில் போனார் சீடர். ஆனையிறவை நெருங்கிய போது தம் பாதங்கள் கதிர்காம யாத்திரையாக நடப்பது அவருக்குப் புரிந்தது. நாளைக்கென்ற ஏற்பாடேதுமில்லாத பரிவிராக வாழ்வின் (முழுத் துறவு) தம்மைச் செலுத்தியிருக்கும் குருவின் சாலத்தை அறிந்து மன மகிழ்ந்தார். பல்லிடை இருந்த குச்சியை வீதியில் எறிந்துவிட்டு பெரும் பயணத்தை நிறைந்த மனத்துடன் தொடர்ந்தார்.

நற்பரியாய் வந்து நின்ற நற்றவ யோகரை பங்குனித் தலைத் திங்களன்று பன்றித் தலைச்சியம்மன் கோயிலுக்கு அழைத்துச் சென்றார். இரண்டாம் திங்களன்று தேரடியில் நல்லூர் முன்றலில் சிவயோகத்தில் பொருந்த வைத்தார். அன்று உவகை பூத்த முகத்தினராய் 'ஒரு பொல்லாப்புமில்லை' என ஓதி அலைத்து நின்ற மாயை அகல தன் கரத்தால் தொட்டு தலைத் தலத்தை (திருவடி) காட்டி சும்மா இருக்கும் சூட்சத்தில் மாட்டிவிட்டார். அன்று வாய்த்த இச் சிவயோக அனுபவம் யோக சுவாமிகளை ஒருபோதும் அகன்றதில்லை. யோக சுவாமிகள் ஆசான் அருளால் ஆசானாயினார்.

யோக சுவாமிகளின் விசர்க்கோலம் நீடிக்கவில்லை. அவர் அருகே இருந்த கொட்டிலுட் குடிபுகுந்தார். காலைப் பொழுதில் கொட்டில் முற்றத்தைக் கூட்டித் துப்பரவு செய்வார். நீராடி, வெண்ணீறு பூசி, சடையை நன்றாகச் சீவி முடித்து, வெள்ளை வேட்டியுடுத்து தோளில் உத்தரியம் பூண்டு கொற்றக் குடையை இடுக்கிய வண்ணம் வீதிகளில் உலாவுவார்.

புகழ்பெற்ற வைத்தியரான கஸ்தூரியார் இல்லத்துக்குப் பவப்பிணி மருத்துவரான சுவாமிகள் அடிக்கடி செல் வார். நூலறிவாளர் கூடிய திருநெல்வேலி ஆசிரிய கலாசாலைப் பக்கமும் வாலறி வனான அவர் சென்றார். சுன்னாகம் செல்லாச்சியம்மையார் எனும் தவமூதாட்டி யாரது தவச்சாலைக்கும் அருந்தவ யோகர் சென்றார்.

இப்படியாக அன்பாளர் பலரைத் தேடியாட்கொண்டார். இன்னும் பலரை இருந்த இடத்தில் இருந்துகொண்டே ஈர்த்தாட்கொண்டார். கொழும்புத்துறை கொட்டிலில் தூபத்தின் நறுமணம் கமழ்ந்தது. அருட்பாக்கள் ஒலித்தன. ஆசாரசீலரான அன்பர்கள் சிலர் அதிகாலை தொட்டு பூசைத் திரவியங்களுடன் வரலாயினர். கொட்டில் ஆச்சிரமமாய்ப் பரிணமித்தது.

வாக்கியப் பிரசாதத்தை பக்குவமாகப் பேணிச் சுகம் பெறவல்ல அன்பாளர்களின் பொருட்டு அவ்வப்போது அவரிடமிருந்து திருவாய்மொழிகள் சுரந்தன. அவை அன்பாளர் உளம் கொளத்தக்க வகையில் இனிமையும் எளிமையும் மந்திரசக்தியும் அருட்பதிவும் உடையனவாயிருந்தன. □

# 4 உதவி அரசாங்க அதிபர் பிரிவுகள் பிரதேச செயலகமாக தரமுயர்த்தப்படும்

## அரச அதிபர் வாக்குறுதி

(காரைநகர்)

காரைநகரில் மூன்று புண்ணிய கைங்கரியங்களிற்கு அடிக்கல் நாட்டும் வாய்ப்புக் கிடைத்ததையிட்டுப் பெருமைப்படுகின்றேன் என்று தெரிவித்தார் யாழ்.மாவட்ட அரச அதிபர் கே.கணேஷ்.

காரைநகரில் ஈழத்துச் சிதம்பர புதிய தேர்த்தரிப்பிடம், காரைநகர் பிரதேச செயலக கட்டடம், காரைநகர் சமுர்த்தி வங்கிக் கட்டடம் ஆகியவற்றிற்கு அடிக்கல் நாட்டி உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இந் நிகழ்வுகளில் யாழ்.அரச அதிபர் பிரதம விருந் தினராகவும், யாழ்.மாவட்ட மேலதிக அரச அதிபர் சிவசுவாமி, காரைநகர் முன்னாள் உதவி அரச அதிபரும் யாழ். மாவட்ட உலக வங்கியின் வடக்கு-கிழக்கு புனர் நிர்மாணத் திட்ட பிரதித் திட்டப் பணிப்பாளருமான வே. சாம்பசிவம், மாகாண கட்டடத் திணைக்கள பிரதம பொறியியலாளர் எஸ். குகனேசன், ஈழத்துச் சிதம்பர ஆதீன கர்த்தாக்கள் ஆகியோர் சிறப்பு விருந்தினர்களாகவும் கலந்து கொண்டனர்.

யாழ். அரச அதிபர் தொடர்ந்து உரையாற்றுகையில்,

காரைநகர் உதவி அரச அதிபர் பிரிவாக காணப்பட்ட போதும் இங்கு பிரதேச செயலக கட்டடம் கட்டுவதற்கே அடிக்கல் நாட்டியுள்ளோம். யாழ்.மாவட்டத்தில் இயங்கும் நான்கு உதவி அரச அதிபர் பிரிவுகளும் அதாவது காரைநகர் , ஊர்காவற்றுறை, மருதங்கேணி, நெடுந்தீவு ஆகியன பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்படுவதற்கு சிபார்சு செய்யப்படவுள்ளன. இவ்வாறு பிரதேச செயலகமாக தரம் உயர்த்தப்படும் போது அலுவலக தரமும் மற்றும் ஏனைய வசதிகளும் உயர்த்தப்படும். இதனூடாக மக்கள் முழுமையான தேவைகளை நிறைவு செய்யக் கூடியதாக இருக்கும்.

1990க்கு முன்பு 33 ஆயிரம் மக்கள் குடியிருந்த காரைநகர் பிரதேசத்தில் இன்று 12 ஆயிரம் மக்களே குடியிருக்கின்றனர். மக்களின் தேவைகள் நிறைவுசெய்யப்பட்டு வரும் வேளைகளில் அனைத்துப் பொதுமக்களும் மீளக்குடியமர முன்வரல் வேண்டும்.

அண்மையில் ஏற்பட்ட சுனாமி தாக்கத்தினால் காரைநகர் பிரதேசமும் பெரிதும் பாதிக்கப்பட்டது. சுனாமி ஒரு அனர்த்தம் என்பது போல மறுபக்கம் ஒரு நல்ல சந்தர்ப்பமாகவும் காணப்படுகின்றது என்றே சொல்ல வேண்டும்.

சுனாமியினால் அழிந்த எமது பிதேசத்தைக் கட்டியெழுப்ப இப் பிரதேச செயலக உத்தியோகத்தர்களும் பொது மக்களும் மன உறுதியுடன் சேவையாற்ற வேண்டும்.

காரைநகரில் பதில் உதவி அரச அதிபரே கடமையாற்றுகின்றார். இதனால் அவருக்கு கடுமையான வேலைப்பளு உள்ளது. இதனைக் கருத்திற்கொண்டு நிரந்தர உதவி அரச அதிபர் ஒருவரை மிக விரைவில் நியமிக்க நடவடிக்கை எடுக்கப்படுகிறது. இங்கு குடிநீர் முக்கிய பிரச்சினையாக உள்ளது. இரணைமடு நீர்விநியோகத் திட்டத்தின்போது தீவுப் பகுதிக்கு முன்னுரிமையளித்து நீர்விநியோகம் செய்யப்படவுள்ளதோடு, 24 மணிநேர மின்சாரமும் வழங்கப்படுவதில் முன்னுரிமையளிக்கப்படும். சேவைகள் என்றும் தேவைகளின் அடிப்படையில் நிறைவேற்ற ஆவன செய்யப்படும் எனவும் தெரிவித்தார்.

அதனைத் தொடர்ந்து மேலதிக அரசாங்க அதிபர் சிவசுவாமி உரையாற்றும் போது, வெறும் கட்டடங்கள் மட்டும் திருப்தியளிக்கப்படமாட்டாது. இதனூடாக முழுமையான மக்களின் தேவைகளும் நிறைவு செய்யப்படும் போதே திருப்தி ஏற்படும். இதற்கு அனைவரும் ஒற்றுமையுடன் செயற்பட முன்வரல் வேண்டும் என்றும் தெரிவித்தார்.

யாழ். செயலக வடக்கு-கிழக்கு புனர்நிர்மாணத் திட்டப் பிரதிப் பணிப்பாளர் வே. சாம்பசிவம் உரையாற்றும்போது, காரைநகர் பிரதேசம் ஊர்காவற்றுறை பிரதேசத்துடன் இணைந்து இருந்தபோது மக்களின் தேவைகளை நிறைவு செய்ய கடல்கடந்து பயணம் செய்ய வேண்டியிருந்தது.பிரதேச செயலகம் , பொலிஸ் நிலையம், நீதிமன்ற கல்வி வலயங்கள், விவசாய திணைக்களங்கள் என்பன எல்லாம் எமக்கு கடல் கடந்தே காணப்பட்டது.

ஆனால் இன்று இவ் அலுவலகங்கள் அனைத்தும் காரைநகரிலேயே இயங்க ஆரம்பித்துள்ளது. கல்வி வலயத்தை வெகு விரைவில் காரைநகரில் அமைப்பதற்கு அரச அதிபரின் கவனத்திற்குக் கொண்டு வரவுள்ளோம். இதனூடாக எமது பிரதேசத்தில் முழுமையான சேவைகளும் நிறைவு செய்ய வழியேற்படும் எனத் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் ஆசியுரைகளை மடத்துக்கரை முத்துமாரியம்மன் ஆலய பிரதம குருவும், காரைநகர் பிரதேச அருட்திரு தேவதாஸ் போதகரும் நிகழ்த்தினர். (து-246)

## பேச்சுத்திறன் காண் வைபவம்

(யாழ்ப்பாணம்)

எவர் சைன் கிட்ஸ் வேல்ட் பேச்சுத்திறன் காண் வைபவம் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணிக்கு யாழ். 123, பிறவுண் வீதித பாடசாலை மண்டபத்தில் செல்லையா ஜெயபாலசிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் வைபத்துக்கு வலம்புரி பத்திரிகை நிர்வாக இயக்குநர் சிவஞானம் வெற்றிவேலாயுதம் பிரதம விருந்தினராகவும், யாழ்.காரை இந்துக் கல்லூரி ஆசிரியர் நடராசா கணேசமூர்த்தி சிறப்பு விருந்தினராகவும் கலந்து கொள்ளவுள்ளனர். (க-7)

## சிவதொண்டன் வெளிவந்துள்ளது


(யாழ்ப்பாணம்)

சிவதொண்டன் நிலையத்தினால் வெளியிடப்படும் சிவதொண்டன் மலரில் சித்திரை மாத இதழ் அண்மையில் வெளிவந்துள்ளது. (க-9)

# "பகிர்வு" -இலக்கிய உலகுக்கோர் புதிய வரவு

ஆதரவுக் கரங்கள் அருகி விட்ட காரணத்தால் பெண் எழுத்தாளர்கள் குறைந்து வரும் நிலையில், கவிதை பரப்பில் பெண் கவிஞர் ஆக்க வரிசையில் இலக்கிய உலகுக்கு 'பகிர்வு' ஒரு புதிய வரவாக உள்ளது.

மரபு காத்து மரபு மீறுவது புதுக் கவிதைக்கு பொருந்தாத ஒன்று என்பார்கள். சுபாஷினியின் கவிதைகள் மரபு காத்து நிற்கின்றது; மரபு மீறியும் செல்கின்றது! கவியரங்கப் பாணியிலும், கதை சொல்லல் பாங்கிலும், நாட்டுப்புறவியல்



மற்றும் இலக்கியம், சமகாலம் முதல் சங்ககாலம் வரை சிகரம் தொட்டுநிற்கின்றபகிர்வில்; சமகாலத்தின் அநீதிகளும் படம் பிடித்துக் காட்டப்படுகிறது.

இக் கவிதைத் தொகுதி பாமரர் படிப்பதற்கு ஏற்றாற் பேல் சிருஷ்டிக்கப்பட்டுள்ளது ஒரு சிறப்பம்சம். அவலம், ஆத்திரம், குதூகலம் இவற்றால் சாதியம், பெண்ணடிமை, சீதனச் சித்திரவதைகள், சமகாலப் பிரச்சினைகள், கலாசாரம் பண்பாடு பற்றியெல்லாம் 'பகிர்வு' பேசுகின்றது.

| | | |
|---|---|---|
| நூல் | :- | பகிர்வு (கவிதைத் தொகுப்பு) |
| விலை | :- | 175.00 |
| ஆசிரியர் | :- | ஜெ.சுபாஷினி |

ஓவியர் ரமணியின் அட்டைப் படமே உள்ளே இருக்கும் கவிதைகள் யாவற்றிற்கும் முன்னுரையாக தெரிகின்றது.

ஆசிரிய கலாசாலை முதுநிலை விரிவுரையாளர் கலாநிதி செ. திருநாவுக்கரசுவின் அணிந்துரை பகிர்வின் பயணங்களை அலசுகின்றதும் சிறப்புக்களாகும்.

பெரும்பாலான கவிதைகள் வலம்புரி-சங்குநாதத்தில் பிரசுரமானவை. ஏனையுன உதயன், ஈழநாடு, வெள்ளிநாதம், மெட்றோ நியூஸ், சுடர்ஒளி போன்ற வெகுஜன ஊடகங்களில் ஏற்கனவே பிரசுரமானவை. வலம்புரியில் வெளிவந்த கவிதைகள் பல இத் தொகுப்பில் இடம்பெற்றிருந்தாலும் அப் பத்திரிகையின் பெயர் பகிர்பவனின் குரலில் கூட இடம் பெறாமல் போனது ஏனோ தெரியவில்லை.

'மிதிவெடி விதைக்கப்பட்ட நம் பூமி மனித எச்சங்கள் கரையேறும் நம் கடல்கள்...' இவ்வாறு சுற்றாடல் என்ற கவிதை நகர்கின்றது.

சீதனத்துச் சீமான்கள் என்ற கவிதை இப்படி முடிகின்றது.

'சீதனத் தீயில் வேகி
சீர்வரிசை கேட்கிறானே
கை நீட்டும் பிச்சைக்காரனும்
இவனும் சமன் போலும்' இவ்வாறு பல கவிதைகள் எழுதியுள்ள நூலாசிரியர் சுபாஷினி யாழ். பல்கலைக்கழகத்தின் இராமநாதன் நுண்கலைக்கழகத்தின் இசைப் பட்டதாரியும், விரிவுரையாளருமாவார்.

## திறனாய்வுக் களம்

**ஜோ.ஜெஸ்ரின்**

செல்வி சுபாஷினியின் கவிதைப் பயணம் தொடர வாழ்த்துக்கள்.

# மதமாற்றத் தடை சட்டமூலத்தை ஆராய விசேடகுழு நியமிப்பு

கட்டாய மதமாற்ற தடைச்சட்ட மூலத்தை ஆராய்வதற்கு 19பேர் கொண்ட குழுவொன்றை சபாநாயகர் டபிள்யூ.ஜே.எம். லொக்குபண்டார நியமித்துள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் குழுவில் அமைச்சர் விஜிததாஸ ராஜபக்ஷ, எதிர்க் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர்களாக மாவை சேனாதிராஜா, செல்வம் அடைக்கலநாதன், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம், இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் தலைவர் ஆறுமுகம் தொண்டமான் உள்ளிட்ட 19 பேர் இடம்பெற்றுள்ளனர். (க-9)

# புதிய வீடமைப்புத் திட்டம்

நகர அபிவிருத்தி மற்றும் நீர் விநியோக அமைச்சுடன் இணைந்து செயற்படும் 'றீல்' நிறுவனம் புதியதொரு வீடமைப்புத் திட்டத்தை ஆரம்பித்துள்ளது.

இந்தத் திட்டத்தின் கீழ் 65 ஆயிரம் வீடுகள் நிர்மாணிக்கப் படவுள்ளன. சகல வசதிகளையும் கொண்ட ஒரு வீட்டை நிர்மாணிப்பதற்கு 10 இலட்சம் ரூபா செலவிடப்படும்.

கொழும்பு நகர்ப்புறத்தில் வாழும் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களுக்கே இந்த வீடுகள் வழங்கப்பட இருக்கின்றன.

றீல் நிறுவனத்தின் தலைவர் மாவலகே பெனட் குரே கருத்துத் தெரிவிக்கையில்,

வீடுகளைப் பெறுவோர் ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன ரென்று தெரிவித்தார்.

வீடமைப்பு நிர்மாண வேலைகள் இந்த வருட இறுதியளவில் பூர்த்தியடையும். (க-7)

# இலவசக் கல்வியின் அனுகூலங்களை அனைத்துப் பிள்ளைகளும் பெறுவார்கள்

## ஜனாதிபதி மஹிந்த உறுதியளிப்பு

(கொழும்பு)

இலவசக் கல்வியைப் பேணிப் பாதுகாக்கும் அரசாங்கத்தின் கடப்பாட்டை ஜனாதிபதி மீண்டும் வலியுறுத்தியுள்ளார்.

இலவசக் கல்வியின் அனுகூலங்களை அனைத்துப் பிள்ளைகளுக்கும் பெற்றுக் கொடுப்பதற்கு அரசாங்கம் திடசங்கற்பத்துடன் நடந்துகொள்ளுமென ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உறுதியளித்துள்ளார்.

இந்த நடைமுறையில் கிராமிய சிறுவர், சிறுமியருக்கு முன்னுரிமை வழங்கப்படும் என்றும் இதன் மூலம் சமூக ஏற்றத்தாழ்வுகளைக் குறைக்கக்கூடியதாக இருக்குமெனவும் அவர் நம்பிக்கை தெரிவித்தார்.

நேற்று முன்தினம் கொழும்பில் நடைபெற்ற வைபவமொன்றில் கலந்து கொண்டு பேசுகையி லேயே இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்,

மஹிந்த சிந்தனைக் கொள்கைப் பிரகடனத்தில் கல்வி மீதான விசேட கவனம் செலுத்தப்பட்டிருக்கிறது.

பாடசாலை மாணவ, மாணவியருக்கு மதிய போஷனம் வழங்குவது ஒரு நடவடிக்கையாகுமென



மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டார்.

இலவசக் கல்வியின் காரணமாக இலங்கையின் எழுத்தறிவு வீதம் வளர்ச்சியடைந்த நாடுகளுக்கு சமமானதாக காணப்படுகின்றதென அவர் கூறினார்.

வடக்கு-கிழக்கு நெருக்கடிகளுக்குத் தீர்வுகண்டு, அனைவரும் அச்சமும் சந்தேகமும் இல்லாத சூழ்நிலையில் வாழக்கூடிய பின்னணியை உருவாக்கும் பொறுப்பு அரசாங்கத்தைச் சார்ந்திருக்கிறதெனவும் அவர் மேலும் தெரிவித்தார். (க-7)

# காசநோய்த் தடுப்பு விழிப்புட்டல்

தமிழீழ சுகாதார சேவையினரால் இம் மாதம் காச நோய்த் தடுப்பு மாதமாகப் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன் தமிழர் தாயகத்தின் பல்வேறு இடங்களிலும் காசநோய்த் தடுப்பு விழிப்பூட்டல் நடவடிக்கைகளும் இலவச வைத்திய முகாம்களும் நடைபெற்று வருகின்றன. கடந்த புதன்கிழமை மட்டக்களப்பு மாவட்டத்தின் பெரிய புல்லுமலை, காந்தி நகர் ஆகிய இடங்களில் காசநோய் விழிப்பூட்டல் நடவடிக்கைகளும் வைத்திய முகாமும் இடம்பெற்றது.

மட்டக்களப்பு மாவட்டத் தமிழீழ சுகாதார சேவைப் பொறுப்பாளர் செல்வக்குமார் தலைமையில் பெரிய புல்லுமலைப் பாடசாலையில் நடைபெற்ற நிகழ்வில் மார்பு நோய் சிகிச்சை வைத்திய அதிகாரி மேகலா, மட்டக்களப்பு மாவட்ட சுகாதார கல்வியூட்டல் அதிகாரி ரெட்ணகுமார், பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களின் மேற்பார்வையாளர் தேவராசன், தமிழீழ சுகாதார இணைப்பாளர் சதீஸ், பல் வைத்திய நிபுணர் திருமதி கேதீசன் உட்படப் பலர் கலந்து கொண்டனர்.

காசநோய் தொற்றிலிருந்து எவ்வாறு எம்மைப் பாதுகப்பது, நோய்களுக்கான அடையாளம். அவற்றை குணப்படுத்துவது உட்பட பல்வேறு விடயங்கள் தெளிவுபடுத்தப்பட்டன.

அத்துடன் பற்சிகிச்சை மற்றும் பொதுவான வைத்திய முகாம் நடைபெற்றது. மாணவர்கள் பொது மக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் இதில் கலந்து கொண்டனர். (க)

# சமுகமளிக்க கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

யாழ்.பல்கலைக்கழக விளையாட்டு அணியின் வீரர், வீராங்கனைகளுக்கு எதிர்வரும் 10ஆம் திகதி திங்கட்கிழமை மாலை 3.30 மணிக்க யாழ். பல்கலைக்கழக மைதானத்தில் புகைப்படம் எடுக்கப்படவுள்ளதால் அனைத்து வீரர், வீராங்கனைகளையும் அன்றைய தினம் தவறாது சமுகமளிக்குமாறு பதில் பணிப்பாளர் கணேசநாதன் கேட்டுள்ளார். (க-9)

# விக்கிரகம் ஒப்படைப்பு

திருநெல்வேலி கிழக்கு பூதநாத சுவாமி தேவஸ்தானத்தில் திருடப்பட்ட அம்மன் விக்கிரகம் கோப்பாய் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டு நீதிமன்றில் ஒப்படைக்கப்பட்டது.

கடந்த மாதம் 30ஆம் திகதி யாழ்.மாவட்ட நீதிமன்ற நீதிபதி இ.த.விக்னராஜாவின் தீர்ப்புக்கிணங்க கோவில் தர்மகர்த்தாவிடம் அவ் விக்கிரகம் மீள ஒப்படைக்கப்பட்டது. (க-136)

# ஊர்காவற்றுறைக்கு புதிய நீதவான்

(ஊர்காவற்றுறை)

தீவகம் வடக்கு ஊர்காவற்றுறைப் பிரதேச மாவட்ட நீதவானாக எஸ்.ரொஸ்கி நீதி அமைச்சினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் முன்பு மலை நாட்டுப் பகுதியில் சட்டத்தரணியாக நீண்டகாலம் கடமையாற்றி வந்தார்.

தற்போது நீதிவானாக ஊர்காவற்றுறையில் பணியாற்றுகிறார்.

ஊர்காவற்றுறை மாவட்ட நீதவான் பா. சுப்பிரமணியம் கடந்த ஏப்ரல் முதலாம் திகதி முதல் சேவையிலிருந்து ஓய்வு பெற்றுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. (க-72)

# புத்தாண்டை முன்னிட்டு— கொழும்பில் பலத்த பாதுகாப்பு

(கொழும்பு)

தமிழ், சிங்களப் புதுவருடத்துக்கென கொழும்புக்கு வரும் பெருந்தொகையான மக்களின் பாதுகாப்புக்கென கொழும்பு மற்றும் அதன் சுற்றுப்புறநகரங்களில் மூவாயிரம் பொலிஸார் கடமையில் ஈடுபட்டுள்ளார்கள் என சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ரிபென்சி பெரேரா தெரிவித்தார்.

புதுவருடத்துக்கு பொருட்களைக் கொள்வனவு செய்யவென கொழும்பு வரும் மக்களை கொள்ளையர்களிடமிருந்து பாதுகாக்க இந் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

ஆயுதம் தாங்கிய பொலிஸாரும் சிவில் உடை அணிந்த பொலிஸாரும் மக்கள் அதிகம் நடமாடும் வீதிகளில் கடமையில் ஈடுபடுத்தப்படுவர்.

தமிழ், சிங்கள புதுவருடம் முடியும் வரை பொலிஸார் சனநெரிசல் மிக்க வீதிகளில் மோட்டார் சைக்கிளில் ரோந்து சேவையிலும் ஈடுபடுவர். (க-7)

# 'வின்ரர் லைற்' திரைப்படக் காட்சி

யாழ்.பல்கலைத் திரைப்பட வட்டத்தினரது ஏற்பாட்டில் நாளை ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு புகழ்பெற்ற சுவீடிஸ் நெறியாளர் 'இங்மார், பேர்க்மன்' இன் நெறியாள்கையில் உருவான 'வின்ரர் லைற்' (குளிர் கால ஞானி) எனும் சுவீடிஸ் மொழித் திரைப்படம் ஆங்கிலத் துணைத் தலைப்புக்களுடன் வீடியோக் காட்சியாக அகன்ற திரையில் காண்பிக்கப்படவுள்ளது.

யாழ்.பல்கலைக்கழக கலைப்பீடத்தைச் சார்ந்த ஊடக வளங்கள் மற்றும் பயிற்சி மையத்தில் இத் திரைப்படம் காண்பிக்கப் படும்.

படக்காட்சியின் இறுதியில் காண்பித்த படம் பற்றிய கலந்துரையாடல் ஒன்றும் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்விற்கு ஆர்வலர்கள் எவரும் வருகை தந்து பயன்பெற முடியுமென் ஏற்பாட்டாளர்கள் அறிவித்துள்ளனர். (க)

# இராசி பலன்

**08.04.2006**
**(பங்குனி 25, சனிக்கிழமை)**
**தசமி பிற்பகல் 1.18 மணிவரை**
**ஆயிலியம் பின்னிரவு 12.20 மணிவரை**
**இராகுகாலம் 9.07-10.37மணிவரை**
**சுபநேரம் 3.07-4.37 மணிவரை**
**யோகர் சுவாமிகள் குருபூசை**
**சித்தாமிர்தம்**

| | |
|---|---|
| மேடம் | சகோதரர் உதவி, மாதாசுகம், முயற்சி தாமதம், திடீர் நன்மை. |
| இடபம் | தடைப்பட்ட காரியம் கைகூடும், உறவினர் வருகை, பொருள சேர்க்கை, போசன நன்மை |
| மிதுனம் | கடின வார்த்தை, குடும்பசுகம், புதிய திருப்பம், பணவிரயம். |
| கடகம் | நல்ல முயற்சி, பிறருக்கு உதவுதல், பித்த ரோகம், கற்பனை மிகுதி. |
| சிங்கம் | காரிய அலைச்சல், பண விரயம், உடல் நலக்குறைவு, பிரயாணம். |
| கன்னி | சுபநிகழ்வு, செய்தொழில் நன்மை, நண்பர்கள உதவி, போசனசுகம். |
| துலாம் | அதிகாரம், தொழில் நன்மை, ஆரோக்கியம், முயற்சி கைகூடும். |
| விருச்சிகம் | கட்டுப்பாடு, போசன சுகக்குறைவு, அதிக பிரயாசை, வீண்செலவு. |
| தனுசு | ஆரோக்கியக் குறைவு, காரிய தடங்கல், பிரயாண பயம், வீண்பகை. |
| மகரம் | செலவாக்கு, குடும்ப மகிழ்ச்சி, தொழில் வருமானம், முயற்சி பலிதம். |
| கும்பம் | அதிகாரம், சுவாரஸ்யம், முயற்சி கைகூடும, பொருள் சேர்க்கை. |
| மீனம் | சொத்துக்களால் கவலை, வேலைச் சுமை, காரியதாமதம், மரியாதைக் குறைவு. |

பழைய நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்


# நெல்சன் மண்டேலா

த. பாண்டியன்

## மீள்பார்வை

### தங்குமிடம் தேடி

11



சொன்னபடி ஒரு தட்டில் அடுக்கப்பட்ட தேநீர் கோப்பைகளுடன் வந்தவர் கவுரிடம் அதை நீட்டினார் . கவுர் பழைய கோப்பை ஒன்றை எடுத்து அதில் தேநீரை ஊற்றி நிறையச் சக்கரை போட்டுக் கலக்கிக் குடிக்கத் தொடங்கினார். மண்டேலாவுக்கும் கண்ணால் அதையே செய்யுமாறு சாடை காட்டினார். மண் டேலா வுக்குக் குழப்பமாகிவிட்டது வந்த நாளிலிருந்து ஒவ்வொரு இடத்திலிருந்தும் துரத்தியடிக்கப்பட்டது நினைவுக்கு வந்தது . வழக்கறிஞராக ஆவதற்கு வந்து சேர்ந்த இங்கும்முதல் நாளன்றே மோதிக் கொண்டால் எனநினைத்து தடுமாறினார். சட்டென்று எனக்குத் தேநீர் வேண்டாம் தண்ணீர் போதும் என்று சொல்லி விட்டு நகர்ந்தார்.

ரத்தத்தில் ஊறிப்போய்விட்ட இனவெறி அவ்வளவு எளிதாக மறைந்து விடாது என்பதை தெரிந்து கொண்டார்.

மறு நாள் மண்டேலா ஒரு வழக்கிற்கான விவரங்களை தட்டெழுத் தடிக்கச் சொல்லிக்கொண்டிருந்தார் . அந்த நேரம்ஒரு வெள்ளையா அங்கு வந்தார். ஒரு கறுப் பர் சொல்வதை ஒரு வெள்ளை மாது கேட்டு எழுதுவதா என பார்ப்பவர் நினைக்கக் கூடும் எனக் கருதி மண்டேலாவிடம் சில்லரை கொடுத்து பக்கத்துக்கடையில் போய் சாம்பூ வாங்கி வர ஏவினாள் குமாரி லீபர் மேன். மண்டேலா ஏதும்பேசாமல் கடைக்குப் போய் சாம்பூ வாங்கி வந்தார் . தெம்பு மன்னர் பரம்பரையைச் சேர்ந்த ஒரு மனிதரை எடுபிடி வேலைக்கே தகுதி என அந்த மாது நினைத் தாள் போலும் ! கபுர்ராடபே எதையும் மறைக்காமல் பேசுகிறவர். அவர் தன் வழக்கறிஞர்களிடமே வாதாடுவார். வெள்ளை நிறத்தார் எங்கள் நிலங்களைத் திருடிக்கொண்டீர்கள். சொந்த நாட்டில் நாங்கள் அடிமைகளாகிவிட்டோம்.

இதேபாருங்கள் எங்கள் இனத் தலைவரை எடுபிடி வேலைக்கு ஏவுகிறீர்கள்? எனச் சாடினார். அவர்கள் மௌனமாக இருந்தனர்.

அதே அலுவலகத்தில் நாட் பிரக்மேன் என்பவரும் பணிபுரிந்து வந்தார். அவர் நன்கு படித்து பட்டம் பெற்றவர். மற்றவர்கள் மாதிரி குரலை மாத்திப்பேசிக் காட்டிச் சிரிப்பது வழக்கம். ஜேன் ஸ்மட்ஸ், வின்ஸ்டன் சர்ச்சில், பிராங்க்ளின் ரூஸ் வெல்ட் ஆகியோர் மாதிரியே பேசிக்காட்டுவார். சட்ட நுணுக் கங்கள் நீதிமன்ற முறைகளை மண்டேலாவுக்குச் சொல்லிக்கொடுத்தார். ஒருநாள் கையில் ஒரு சிறு பலகார ரொட்டியுடன் வந்தார். அதை நீட்டி மறுபக்கத்தில் பிடித்துக்கொண்டு இழுக்கச் சொன்னார் அது இரண்டாகத் துண்டிக்கப்பட்டு பாதிமண்டேலாவின் கையில்நின்றது . இதைசாப்பிடு எனச் சொன்னவர் இப்படி பங்கிட்டு உண்பதுதான் பொது உடமையின் அடிப்படையெனத் தெடங்கினார் . பின்னர் கம்யூனிசம் என்றால் என்ன என்பதை பல முறை பாடமாகச் சொல்லி வந்தார். அவர் கம்யூனிஸ்டுக் கட்சி உறுப்பினர் என்பது தெரிந்தது .

கவுர்ராடபேயும் ஒரு கம்யூனிஸ்டு என்பது விரைவில் தெரிந்துவிட்டது. ஆனால் கவுர் மண்டேலா வைக் கம்யூனிஸ்டுக்கட்சியில்சேருமாறு வற்புறுத்தவே இல்லை. அதன் சிறப்புக்களைக் கூறு வதோடு நிறுத்திக்கொள்வார்.

அவர் ஆபிரிக்க தேசி ய காங்கிரசிலும் கம்யூனிஸ்ட் கட்சியிலும் உறுப்பினராக இருந்தார் . ஆபிரிக்க தேசியக் காங்கிரஸ் மூலம் தான் தென்னாபிரிக்கா விடுதலையைப்பெறும் என்பதை அழுத் தமாகக் கூறிவந்தார். பல கூட்டங்களுக்கு மண்டேலாவை அழைத்துப் போனார்.

அங்கே சகல இனத்தவரும் நிறத்தவரும் இருந்தனர். வேறுபாடுஇன்றிப் பழகினர். எளிமையாக உடையணிந்து இருந்தனர். அவர்கள் பேசுவது தர்க்கிப்பது மிக உயர்மட்ட விவகாரமாகத் தெரிந் தது.

இந்தக் கூட்டங்களின் போது ரோட்ஸ் பல்கலைக் கழகத்தில் எம். ஏ பட்டம் பெற்றிருந்த மைக் கேல் ஹார்மல் என்பவரை மண்டேலா சந்தித்தார் . அவர் எளிய உடையில் டை கூட கட்டாமல் இருந்தார். இவர் கறுப்பர்களுடன் எந்தப் பாகுபாடும் இல்லாமல் தோளில் கைபோட்டுப் பேசிக்கொண்டிருந்தார். எந்த படாடோபத்தையும் கணோம். அவர்கள் பேசும்போது வர்க்கப்புரட்சி பற்றியே பேசிக் கொண்டி ருந்தார்கள். தென்னபிரிக்க இனஒதுக்கீட்டுக் கொடுமைகளும் இல்லாதவர் உள்ளவர்களுக் கிடையிலான வர்க்கப்போர்தான் இது. தீர புரட்சிதான் வழி எனப்பேசிக்கொண்டே இருந்தனர்.

மதிக்கத்தக்க அறிவு மிக்க தியாக சீலர்களாக தோன்றினாலும் இவர்கள் பேசுவது இங்கி லாந்து, ஜெர்மனி , பிரான்சு, ரஷ்யாவுக்குப் பொருந்துவதாக இருக்கலாம். தென்னாபிரிக்க இனக் கொடுமைகளுக்கு இவை காரணமல்ல என மண்டேலா நினைத்துக்கொண்டார். ஆனால் வாதிட வில்லை..

மைக்கேல் ஹார்மல் மண்டேலாவின் நெருங்கியநண்பர் ஆனார். அவர் சிறந்த எழுத்தாளர். சிந்தனையாளர். பேச்சாளர், பெரும் பட்டம் பெற்றவர் . விரும்பியிருந்தால் பிரபு வாழ்க்கை வாழ்ந்து இருக்கலாம். அவற்றைத் தூக்கி உதறி எறிந்துவிட்டு ஆபிரிக்க மக்கள் மாதிரியே தரையிலும் படுத்து உறங்கத் தயாராக இருந்தார் . இவர் மீது மரியாதையும் வளர்ந்தது நட்பும் வளர்ந்தது.

சைடஸ்கியின் அலுவலகத்தில் பணிபுரிந்த காலத்தில் கவுர் மைக்கேல் ஆகியோருடன் பழகியதால் அரசியல் விஷயங்களைத் தெரிந்து கொள்ள முடிந்தது . ஆனால் அரசியலில் ஈடு படாமல் தொழிலில் முன்னேறி வழக்குரைஞராக வந்து சம்பாதித்து அம்மாவுக்கு வீடும் தோட்டமும் வாங்கிக் கொடுத்து அமைதியாக வாழவைக்க வேண்டும் என்ற ஆவலே மேலோங்கி இருந்தது. சைடல்ஸ்கியின் அலுவலகத்தில் ஆற்றிய பணிக்காக வாரத்துக்கு இரண்டு பவுண் சம்பளம் தந்து வந்தனர். இதில் ஒருபங்கை நிறுவனத்திற்கு கட்ட வேண்டும். அதைமட்டும் ரத்துச்செயதனர். இதை வைத்துத்தான் வாழ்க்கையை நடத்த வேண்டும். இருப்பதற்கு இடம் தேடுவதே பெரிய வேலை யாகிவிட்டது. சோமா என்பவர் பல சிறிய தகரக்கொட்டடிகளைக் கட்டிவாடகைக்கு விட்டிருந்தார். அதில் ஓரத்திலிருந்த ஒரு கொட்டடி மண்டேலாவுக்குத் தரப்பட்டது. மலிவான வாடகைதான். ஆனால் மின்சார வசதி குடிநீர்க் குழாய் காற்றாடி ஏதும் இல்லை. எப்படியோ தனியாக இருக்க ஒரு இடம்கிடைத்தது படிப்பதற்காகமெழுகுவர்த்தி வாங்க நிறையச் செலவானது.

ஜோகன்ஸ் பர்க்கின் ஒரு பகுதியாக விளங்கிய அலெக்சாண்ட்ரா எல்லா இன ஆபிரிபக்க மக்களும் வந்து குடியேறிய ஒரு சேரிப் பகுதி. எங்கு பார்த்தாலும் சின்னச்சின்னக் கொட்டடிகள் கற்கள் பரப்பி தார்போட்டசாலை என்பதே கிடையாது. சாக்கடை ஓடுவதும், தெருவும் ஒன்று தான் இடை இடையே ஒரு சில கெட்டி வீடுகள் இருந்தன.

அது பேட்டை ராஜாக்களின் வீடுகள்

மும்பாயின்தாராவியை(60 ஆண்டுகளுக்கு முன்னர்)யும் சென்னை காசிமேடு கரையோரக் குப்பங்களையும் பார்த்தவர்களுக்கு அலெக்சாண்ட்ராவைப் புரிந்து கொள்வது சுலபம். எங்கு பார்த் தாலும் சுகாதாரமற்ற சிறிய கடைகள் ஒவ்வொரு தெருவிலும் காய்ச்சி விற்கும் நாட்டுச் சாரா யம் திருடுவது, குத்திக்கொலை செய்வது என்ற பலவகை சமூக விரோதச்செயலில் ஈடுபட்ட குழுக் களுக்குப் பஞ்சமே இல்லை இரவில் உயிருக்கு அஞ்சாதவன் மட்டுமே நடக்கலாம் ஒரே இரைச் சல் அசுத்தம்.... இதுதான் அலெக்சாண்ட்ரா . இந்த இடம்தான் ஆபிரிக்க மக்கள் சொந்தமாக வாங் கிக்கொண்டு குடியிருக்க ஒதுக்கப்பட்ட இடம்மற்ற இடங்கள் கரு நிறத்தவர் கோடி கொடுத் தாலும் ஒரு அடி நிலத்தைக் கூட வாங்க முடியாது .வாங்கத் தடை இருந்தது. இது நாடு பூராவிலுமிருந்த சட்டம். எனவே, அலக்சாண்ட்ரா ஆபிரிக்கர்களுக்குப் புண்ணிய பூமியாகப்பட்டது இங்கு தான். மண் டேலா ஐந்தாண்டு காலம் வாழ்ந்தார். (தொடரும்)

## துவக்கால சிந்தனை

### ஆயர் தம் மந்தையைக் காப்பதுபோல் ஆண்டவர் நம்மைக் காப்பார்

அகிலத்தைப் படைத்து அனைத்தையும் ஆண்டு நடத்தும் அதிகாரம் பெற்ற மாபரனே, தலைமறைவாய் பாலைவனத்தில் வாழும் நிலை! இவரின் நற்செயலைக் கண்டு பாராட்ட மனம் இல்லை. ஆனால் தன் பசியைத் தீர்க்க பிணத்தைச் சுற்றி வட்டமிடும் கழுகைப்போல தனது பட்டம், பதவி, கௌரவம் இவற்றைத் தக்க வைத்துக் கொள்வதற்காக, இயேசுவுக்கு கண்ணி வைக்கிற பரிசேயர் கூட்டம். நன்மை செய்வதையே இலட்சியமாகக் கொண்ட இயேசு சதித்திட்டத்திற்கு ஆளாகிறார். உலகம் வாழ்வு பெறவேண் டும்என்பதற்காக வந்த இயேசுவை அழித்தொழிக்க வேண்டும் என்று திட்டம் தீட்டுகிறார்கள். நீதியையும் நேர்மையையும் கட்டிக்காத்து, சத்தியத்திற்கும் தர்மத்திற்கும் பணிசெய்ய வேண்டிய, சட்டங்களும் அரசியல் பரிசேயர்களைப் போலவே இன்று செயல்படுகின்றன. புதிய வானம், புதிய பூமி காணத் துடிக்கும் இன்றைய இளைஞர் களுக் கும், ஏழை எளியவர்களுக்கும் இயேசுவின் நிலை ஏற்பட வில் லையா? இயேசுவின் வாழ்வு அவர்களுக்கு சான்றாக விளங்கட்டும். சவால்களை சந்தித்து சத்தியம் படைக்கும் சரித்திர நாயகர்களாக வாழ வழிவகுக்கட்டும்.

காவலன்

## தமிழீழ வைப்பகத்தின் பள்ளிச் சேமிப்பு அலகு







பாடசாலை மாணவர்களின் எதிர்கால நலன்களை கருத்தில் கொண்டு தமிழீழ வைப்பகத்தின் பள்ளிச்சேமிப்பு அலகு கிளிநொச்சி மகாவித்தியா லயத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

கடந்த புதன்கிழமை கிளிநொச்சியில் இடம்பெற்ற இந்நிகழ்வில் பொதுச் சுடரினை வலயக் கல்விப் பணிமனையின் உதவிக் கல்விப் பணிப்பாளர் முருகவேல் ஏற்றி வைத்தார்.

தமிழீழ தேசியக்கொடியினை தமிழீழ வணிகர் ஒன்றியத்தலைவர் வெற்றியரசன் ஏற்றிவைத்தார். பாடசாலைக்கொடியினை வித்தியாலய முதல்வர் யோகநாதன் ஏற்றிவைத்தார். தமிழீழ வைப்பகத்தின் பள்ளி அல கின் பெயர்ப்பலகையினை கரைச்சி பிரதேச செயலாளர் செல்வி சுலோ ஜினி திரைநீக்கம் செய்து வைத்தார்.

பள்ளிச்சேமிப்பு அலகு கட்டடத்தினை தமிழீழ வைப்பக மேலாண்மை பணிப்பாளர் வீரத்தேவன் நாடாவை வெட்டி திறந்து வைத்தார். தொடர்ந்து பள்ளிச் சேமிப்பினை தமிழீழ மாணவர் அமைப்பு பொறுப்பாளர் முகுந் தன், செஞ்சோலைப் பொறுப்பாளர் சுடர்மகள், பிரதேச செலாளர் சுலோஜினி ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர். (கு)

நல்லதைச் செய்ய வேண்டும். நல்லதைச் சொல்ல வேண்டும். நல்லதை நினைக்க வேண்டும் என்ற இலட்சியத்தில் ஈடுபட்டால் யாவும் நல்லனவாகவேயிருக்கும்.

-சுவாமி இராமதாஸர்

வலம்புரி

## யாழ்.மாநகரத்தின் சுத்தம் பேணுவதில் பொதுமக்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

யாழ்ப்பாண மாநகரத்தை அழகுபடுத்தும் பணியில் யாழ். மாநகர சபை செயலாற்றி வருகின்றது.

யாழ். நகரத்தின் மையத்திலுள்ள நவீன சந்தைப் பகுதியை புனரமைத்தல், ஆரிய குளத்தைத் திருத்தியமைத்தல், கழிவுகளை அகற்றுவதற்கு வசதியாக கொள்கலன்களை பொது இடங்களில் வைத்தல் என பல்வேறு பணிகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

யாழ்ப்பாண மாநகர சபையினால் முன்னெடுக்கப்படவுள்ள இப் பணிகள் பூரண வெற்றியைத் தர வேண்டுமெனில் அதற்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குவது அவசியமானதாகும்.

யாழ்ப்பாண மாநகர சபை குப்பை கூழங்களை அகற்றும் பணியை செம்மையாக முன்னெடுக்கின்ற போதிலும் அந்தப் பணிக்கு பொதுமக்கள் ஒத்துழைப்பு வழங்குவதாகவில்லை.

குறிப்பாக வீட்டில் சேருகின்ற குப்பை கூழங்களைத் தெருவில் கொட்டிவிட்டுப் போகும் பொறுப்பற்ற செயல் தொடர்ந்த வண்ணமேயுள்ளன.

நாம் வாழும் இந்தக் காலம் 21 ஆம் நூற்றாண்டுக்குரியது. சந்திரனில் கல்லெடுத்து செவ்வாயில் கோவில் கட்டும் காலம் இது.

தகவல் தொழில் நுட்பத்தின் அதீத வளர்ச்சியினால் உலகம் முழுவதிலும் ஒருகணப் பொழுதில் தொடர்பாடலை ஏற்படுத்தக் கூடிய காலம்.

இவ்வாறு அதி நவீன விஞ்ஞானத் தொழில் நுட்பம் மேன்மை பெற்றிருக்கும் இக் கால கட்டத்தில் யாழ்ப்பாணத்து மக்கள் இன்னமும் பழைமைக்குள் - அறியாமைக்குள் வாழ்கிறார்களா? என்ற கேள்வியை அவர்களின் மனச்சாட்சிக்கு ஒவ்வாத செயல்கள் கேட்க வைக்கின்றன.

வீட்டில் சேருகின்ற குப்பை கூழங்களை வீட்டிலேயே சேர்த்து வைத்து அதனை யாழ். மாநகர சபை உதவியுடன் அகற்றுவதை விடுத்து,

பாடசாலைகள், ஆலயங்கள், சந்தைகள் மற்றும் பொது இடங்களில் கொட்டி விடுவது எத்துணை நியாயமானது.

சுத்தம் சுகம் என்பதை பொறுத்தவரை அது முழுமையானதாகப் பேணப்பட வேண்டும். என் வீட்டுக் குப்பையைத் தெருவில் கொட்டிவிட்டு நான் மட்டும் சுத்தமாகவிருந்து விடலாம் என்ற நினைப்பு அறியாமையின் உச்சமாகும்.

வாழைப்பழம் எனக்கு வாழைத்தண்டு வீதிக்கு என்ற குறுகிய மனப்பாங்கால் விபத்துக்களும், அகால மரணங்களுமே நடக்கும்.

ஆக, நான் மட்டும் வாழ்தல் என்ற குறுகிய சிந்தனை மாறி எல்லோரும் வாழ வேண்டும் என்ற மானப் பாங்கை ஏற்படுத்திக் கொள்வதன் மூலமாகவே உயர் நோக்கமுடைய திட்டங் கள் வெற்றிபெறுவதற்கு தேவையானதாகும்.

# கடற்றொழிலாளர் கூ. சங்கங்களின் நிர்வாகம் முகாமைத்துவம் குறித்து ஆய்வு நடத்தப்படும்

(தென்மராட்சி)

வட-கிழக்கு மாகாணத்தில் உள்ள ஆறு மாவட்டங்களில் இயங்கி வரும் 464 கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் நிர்வாகம், முகாமைத்துவம் செயற்பாடு குறித்த நிலவர ஆய்வினை உணவு விவசாய நிறுவனம் மேற்கொள்ளவுள்ளது.

இவ்ஆய்வில் அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை, முல்லைத்தீவு, கிளிநொச்சி, யாழப்பாணம் ஆகிய ஆறு மாவட்டங்கள் உட்படுத்தப்படவுள்ளன.

இப்பணியில் மேற்படி ஆறு மாவட்டங்களில் இயங்கி வரும் அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையங்கள் ஈடுபடும்என உணவு விவசாய நிறுவனத்தின் பிராந்தியப் பணிப்பாளரான கலாநிதி ஸ்ரீவ்கிறீச் தெரிவித்துள்ளார்.

இந்த வகையில் யாழ்ப்பாணத்தில் 117 கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களும், கிளிநொச்சியில் 21 சங்கங்களும், முல்லைத்தீவு 23 சங்கங்களும், திருகோணமலையில் 72 சங்கங்களும், மட்டக்களப்பில் 117 சங்கங்களும், அம்பாறையில் 114 சங்கங்களுமாக மொத்தமாக 464 சங்கங்களுக்கான ஆய்வுப் பணிகள் மேற்கொள்ளப்படவுள்ளன.

தற்போது இயங்கிவரும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களில் நிலவும் பலம், பலவீனம், வாய்ப்புக்கள் மற்றும் அச்சுறுத்தல் பற்றி அந்தந்த மாவட்டங்களில் இயங்கிவரும் உள்ளூர் அரச சார்பற்ற நிறுவனத்தினர் குறித்த ஆய்வுப்பணிகளை கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் அங்கத்தவர்கள், தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் பொருளாளர்களுடன் இணைந்து செய்யவுள்ளனர் எனத் தெரியவருகின்றது.

இதன் மூலம் தற்போது இயங்கிவரும் கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களின் செயற்படும் தன்மைகளை வலுவுள்ளதாக்கும் முயற்சியில் உணவு விவசாய நிறுவனம் ஈடுபட்டு வருகின்றது. இவ்வகையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள 117 கடற்றொழிலாளர் கூட்டுறவுச்சங்கங்களுக்கான ஆய்வினை மேற்கொள்வது குறித்த செயல்பட்டறை ஒன்று கடந்த வியாழனன்று யாழ். மாவட்ட அரச சார்பற்ற நிறுவனங்களின் இணையத் தில் உணவு விவசாய நிறுவனத்தினால் நடாத்தப்பட்டது.

இணையத்தலைவர் ஏ.கே. சிவசுப்பிரமணியம் தலைமையில் நடைபெற்ற செயற்பட்டறையில் ஊற்று, அறவெளிப் போராட்டக்குழு மற்றும் மகளிர் அபிவிருத்தி நிலையமாகிய நிறுவனங்களின் பிரதிநிதிகள் பங்குகொண்டிருந்தனர்.

இந்த ஆய்வுப்பணிகள் குறித்த விரிவுரையை உணவு விவசாய நிறுவனத்தின் வட-கிழக்கு மாகாண பிராந்தியப் பணிப் பாளர் கலாநிதி ஸ்ரீவ்கிறீச் வழங்கினார். யாழ்ப்பாணத்தில் இந்த ஆய்வுப் பணி ஏப்ரல், மே, ஜூன் மாதங்களில் மேற்கொள்ளப் படும் என கலா நிதி ஸ்ரிவ் கிறீச் தெரிவித்தார் என அறியப்படுகின்றது.

இதே சமயம் இந்த ஆறு மாவட்டங்களில் இயங்கி வரும் இரண்டாம் படி சங்கங்கள் மற்றும் சம்மேளனங்களையும் இந்த ஆய்வில் ஈடுபடுத்தலாமா என உணவு விவசாய நிறுவனம் தற்போது ஆராய்ந்து வருகின்றமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த ஆய்வுப் பணியில் யாழ். மாவட்ட கூட்டுறவுத் திணைக்களம் மற்றும் கடற்றொழில் அமைச்சு ஆகியனவும் அரச சார் பற்ற நிறுவனங்களுக்கு வேண்டிய ஒத்துழைப்பினை வழங்கவுள்ளன.

(க-16)

# ஆலயங்களில் எழுப்பப்படும் ஒலி பெருக்கி சப்தம்! மாணவர் சமூகத்தில் கல்வி செயற்பாடுபாதிப்பு

(தென்மராட்சி)

யாழ்ப்பாண மாவட்டத்தில் ஆலய உற்சவ காலங்கள் ஆரம்பித்துள்ளதைத் தொடர்ந்து ஒலிபெருக்கிகளின் சத்தங்கள் எல்லா இடங்களையும் ஆக்கிரமித்து மாணவர்களது கல்வி செயற்பாடுகளுக்கு பெரும் குந்தகங்களை ஏற்படுத்தி வருகின்றனர்.

ஆலயங்களில் ஒலி பெருக்கிகள் பாவிக்கப்பட்டு வருவதால் காலை, மதியம் மற்றும் மாலை நேரங்களில் உச்சக்கட்ட ஒலிகளை எழுப்பி மக்களின் நிம்மதியான வாழ்வுக்குப் பெரும் இடைஞ்சல்களையும் தடங்கல்களையும் ஏற்படுத்திக்கொள்கின்றன.

இத்தகைய செயற்பாடுகளை கட்டுப்படுத்தி மாணவர்களின் கல்வியை மேம்படுத்தக்கூடிய நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என மாணவர்களின் பெற்றோர்களும் கல்விச் சமூகமும் பெரிதும் எதிர்பார்க்கின்றது. இதே சமயம் பாடசாலை மாணவர்களுக்கான பரீட்சைகள் அண்மித்துவருவதால் ஒலிபெருக்கிகள் எழுப்பும் ஓசைகள் மாணவர்களின் கவனங்களை திசை திருப்பி விடும் என பெற்றோரும் கல்விச் சமூகமும் அஞ்சுகின்றனர் எனத் தெரியவருகின்றது.

இது இவ்வாறு இருக்க ஐஸ்கிறீம், ஐஸ்பழம் போன்றவற்றினை வாகனங்கள் மற்றும் துவிச்சக்கர வண்டிகளில் விற்பனை செய்வோரும் பாடசாலைகளுக்கு அண்மித்த இடங்களில் நின்று ஒலிபெருக்கிகள் மூலம் ஓசைகளை எழுப்பி மாணவர்களின் கல்விச் செயற்பாடுகளுக்கு குந்தகங்களை ஏற்படுத்தி வருகின்றமையும் அவதானிக் கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள ஆலயங்களில் ஒலி பெருக்கிகள் பாவிப்பதில் ஒரு சில வரையறைகளை ஏற்படுத்திக்கொள்வதன் மூலமே மாணவ சமுதாயத்தின் கல்விச்செயற்பாடுகளுக்கு ஏற்படும் இடைஞ்சல்களை தவிர்த்துக் கொள்ள முடியும்.

இதுவிடயத்தில் ஆலய தர்மகர்த்தாக்கள் பரிபாலன சபையினர் இணைந்து சமுதாய முன்னேற்றம் கருதி செயற்பட முன்வர வேண்டும் என சமு தாய ஆர்வலர்கள் பெரிதும் விரும்புகின்றனர்.

(க-16)

# ஊர்காவற்படையினர் இருவர் சுட்டுக்கொலை

(கொழும்பு)

இரண்டு ஊர்காவற்படை வீரர்கள் நேற்று காலை வெலிகந்த குடாப் பொக்கணப்பகுதியில் வைத்து சுட்டுக் கொல்லப்பட்டுள்ளனர்.

கடமை முடிந்து பொலிஸ் நிலையத்தில் தமது ஆயுதங்களை ஒப்படைத்து விட்டு வீடு திரும்பிக்கொண்டிருந்த வேளையிலேயே இவ்விருவரும் சுட்டுக்கொல்லப்பட்டதாக இராணுவப் பேச்சாளர் பிரிகேடியர் பிரசாத் சமரசிங்க தெரிவித்தார்.

நேற்று காலை 7.30 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் ஊர்காவல் படை வீரர்கள் இருவரும் துப்பாக்கிச் சூடு இடம்பெற்ற இடத்திலேயே உயிரிழந்ததாக இராணுவப் பேச்சாளர் மேலும் கூறினார்.

(க-7)

# மதுக்கடைகளை மூடக் கோரி குருநகரில் ஊர்வலம்

(யாழ்ப்பாணம்)

குருநகர் பகுதியில் புதிதாக அமைக்கப்பட்ட மது விற்பனை நிலையங்களை அகற்றக்கோரி நேற்றுக்காலை 8.30 மணிக்கு குருநகர் புனித யாகப்பர் ஆலயத்திலிருந்து யாழ். கச்சேரி செயலகத்தை நோக்கி பிரமாண்டமான மக்கள் ஊர்வலமொன்று நடாத்தப்பட்டது.

இந்த ஊர்வலத்தில் பாடசாலை மாணவர்கள், ஆண், பெண் உட்படப் பெருமளவான பொதுமக்கள் மற்றும் மத குருமார் பிரமுகர்கள் எனப் பெரும் எண்ணிக்கையானோர் கலந்து கொண் டார்கள்.

சுமார் ஒருமைல் நீளமுடைய இந்த ஊர்வலம் யாழ். செயலகத்தில் அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றைக் கையளித்ததுடன் நிறைவு பெற்றது.

(கு)

# துணை இராணுவக் குழுவை அடையாளம் காண இயலவில்லை

## சந்திரா பெர்னாண்டோ தெரிவிப்பு

தமிழர் தாயகப்பகுதியில் இயங்கும் துணை இராணு வக் குழு எது என்பதை அடையாளம் காண இயல வில்லை என்று பொலிஸ் மா அதிபர் சந்திரா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் சந்திரா பெர்னாண்டோ கூறுகையில், பொலிஸ் திணைக்களத்தின் கீழ் சிறப்பு அதிரடிப்படை மட்டுமே துணை இராணுவக் குழுவாக இயங்குகிறது ஆயுதங்களுடன் நடமாடுகிற வேறு துணை இராணுவக்குழு குறித்து அடையாளம் காண இயலவில்லை. குற்றவாளிகள் உட்பட அனுமதியின்றி ஆயுதம் வைத்திருக்கும் அனைவர் மீதும் சட்டபூர்வ நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

ஆயுதக் குழுவினரை கைதுசெய்யுமாறு கண் காணிப் புக் குழுவினர் கோரிக்கை விடுக்கத் தேவையில்லை. அது பொலிஸாரின் கடமை இருப்பினும் துணை இராணுவக் குழுவினர் எங்கிருக்கின்றனர் என்று கண் காணிப் புக்குழுத்தெரிவித்தால் அவர்களை பொலிஸ் கைது செய்யும் அல்லது எமது புலனாய்வுத்தறை மூலம் கைது நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றார்.

(க)

### சுன்னாகம் பதி தாழையடி பூரணை புட்கலை சமேத ஸ்ரீ ஹரிகர புத்திர ஐயனார் பெருமானின் மஹோற்சவ பாடல்கள்



### எட்டாம் திருவிழா

இராகம்-சிவரஞ்சனி | தாளம் -ஆதி

பல்லவி

எத்திசையும் ஒலிக்கும் ஐயப்பன் நாமத்தை
எண்ணித் துதிப்பவர்க்கு எண்ணியவை கைகூடும்
—எத்திசை

அனுபல்லவி

பக்தியுடன் அவனைப்பாடி ஸ்ரீ ஹரிகர சுதன்
பூரணை புட்கலை நாதன் என்றழைத்தால் பாவங்கள் பறந்தோடும்
—எத்திசை

சரணம்

புத்திதரும் நெஞ்சில் சுத்திதரும் உடலில்
சக்தி தர வேண்டும் சித்திதந்து முடிவில்
முத்தி தரும் ஆதி மூலப் பொருளாமந்த
மூர்த்தியின் என்னரிய கீர்த்தியெல்லாம் பரவி— எத்திசை

ஆக்கம்-ஐயப்ப அடியவர்

### தினசரி தியானம் விவேகச் சிந்தனைகள்



நாம எந்த இடத்தில் இருந்தாலும் கடவுள் நம்மை நிராகரிப்பதில்லை. அரண்மனையில் இருந் தாலும் ஆண்டியாக இருந்தாலும் ஆண்டவனின் கருணை எனபது சூரிய சந்திரர்களது ஒளியைப் போல ஒன்றாகவே ஒவ்வொருவர் மேலும் படுகிறது.

சுவாமி விவேகானந்தர்

## விக்னேஸ்வரன் படுகொலையின் எதிரொலி

# நாடாளுமன்றில் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டம்

# சபை நடவடிக்கைகள் மே 9 வரை ஒத்திவைப்பு

(கொழும்பு)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் ஆர்ப்பாட்டத்தையடுத்து நாடாளுமன்றம் எதிர்வரும் மே மாதம் 9 ஆம் திகதி வரை ஒத்திவைக்கப்பட்டுள்ளது. சபாநாயகர் டபிள்யு.ஜே.எம். லொக்குபண்டார தலைமையில் நேற்றுக் காலை 10 மணிக்கு நாடாளுமன்ற செயற்பாடுகள் ஆரம்பித்தது.

அவசரகாலச் சட்ட யோசனையை நாடாளுமன்றத்தில் சமர்ப்பித்த பிரதமர் ரட்ணசிறி விக்கிரம நாயக்க பல்வேறு அசம்பாவித சம்பவங்கள் இடம்பெற்று வருவதால் அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒருமாத காலத்திற்கு நீடிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதனையடுத்து ஐக்கிய தேசியக் கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் மைக்கல் பெரேரா உரை நிகழ்த்தினார். இவரின் உரையையடுத்து திருமலை தமிழ் மக்கள் பேரவைத் தலைவர் விக்னேஸ்வரனின் படுகொலையைக் கண்டித்துத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் அவை நடுவிற்கு வந்து ஆர்ப்பாட்டம் செய்தனர்.

'கொலைகார அரசே நீ அவசரகாலச் சட்டத்தைக் கொண்டு வருவது தமிழர்களைக் கொல்லவா?' என அவர்கள் கூச்சலிட்டபடி சபாநாயகரின் ஆசனத்திற்கு அருகில் சென்று செங்கோலையும் எடுக்க முயற்சித்தனர். எனினும் அவர்களின் முயற்சி கை கூடவில்லை.

இவர்களின் ஆர்ப்பாட்டத்தையடுத்து சபா நாயகர் 10.10 மணியளவில் நாடாளுமன்றத்தை ஒத்திவைத்தார். நாடாளுமன்றம் மீண்டும் 10.31 மணிக்கு கூடிய போதும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் தொடர்ந்தும் கூச்சலிட்டு ஆர்ப்பாட்டம் செய்தனர்.

இவர்களின் ஆர்ப்பாட்டத்திற்கு மத்தியிலும் சபாநாயகர் அவசரகாலச் சட்ட நீடிப்பிற்கான தீர்மானத்தை நிறைவேற்றியிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது. (க-9,4)

## இலங்கையில்...

இலங்கை அரசுக்கும் விடுதலைப்புலிகளுக்குமிடையே ஜெனீவாவில் நடந்த முதற் சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஒப்புக் கொள்ளப்பட்ட பல அம்சங்கள் இன்னமும் அமுல் படுத்தப்படாது இருப்பது மிகவும் துரதிஷ்டவசமானது.

விடுதலைப்புலிகள் அனைத்து வகையான வன்முறைகளையும் முடிபுக்குக் கொண்டு வர வேண்டும். இதேநேரத்தில் அரசுப் படைகளின் ஆதரவுடன் செயற்படுவதாகக் கூறப்படும் கருணா குழுவினர் தமிழீழ விடுதலைப்புலிகள் மீதான தாக்குதலை நிறுத்திக் கொள்ள வேண்டும் என அவர் வலியுறுத்தினார்.

திருமலை தமிழ் மக்கள் பேரவையின் தலைவர் விக்னேஸ்வரன் கொலைக்குக் கண்டனம் தெரிவித்த சொல்ஹெய்ம் இது போன்ற சம்பவங்கள் சமாதான முயற்சிகளைச் சீர்குலைத்து விடும் என எச்சரித்தார்.

விடுதலைப்புலிகள் ஜெனீவாப் பேச்சுவார்த்தை நடாத்தச் செல்லும் போது அவர்களின் பாதுகாப்புக்கு முழு உத்தரவாதம் அளிக்கப்படும் என்று ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தனிப்பட்ட உத்தரவாதம் அளித்திருப்பதாக சொல்ஹெய்ம் தெரிவித்தார். (ச-4)

# துக்கதினம் அனுஷ்டிக்குமாறு யாழ்.மக்களிடம் வேண்டுகோள்

(யாழ்ப்பாணம்)

தமிழ்த் தேசப் பற்றாளர்களும், தமிழ்த் தேசிய உழைப்பாளர்களும் தொடர்ந்தும் கொல்லப்பட்ட வண்ணமேயுள்ளனர். அதன் விஸ்வரூபமாக நேற்றுப் பட்டப்பகலில் மக்கள் பார்த்திருக்க அரச படைகளும், அரசின் அராஜகக் கும்பல்களான அரச துணைப் படைகளாலும் அநியாயமாகக் கொல்லப்பட்ட தமிழ்த் தேசியத்தின் பற்றாளனும் தமிழ்த் தேசியத்தின் உழைப்பாளனும் தென் தமிழீழ மக்களின் மீது அரச வல்லாதிக்கம் செலுத்தும் அடக்கு முறைகளை எதிர்த்துத் தமிழ்த் தேசியத்தோடு ஒன்றித்து உலகறியச் செய்த ஒரு உன்னத மக்கள் தொண்டனாகவும் விளங்கிய தேசிய உழைப்பாளர் விக்னேஸ்வரன் மீதானக் கொலைத் தாண்டவச் செயலை யாழ்.மாவட்ட பொது அமைப்பினராகிய நாம், எமது வன்மையான கண்டனத்தைத் தெரிவித்து நிற்கின்றோம்.

ஜெனீவாவில் இடம்பெறவிருக்கும் அடுத்த கட்டப் பேச்சுக்களைக் குழப்பி போருக்கான அறைகூவலை அநியாயப் படுகொலை மூலம் கட்டவிழ்த்துவிடும் அரசினதும், அரச படைகளினதும், அரச துணைப்படைகளினதும் பேரினவாதச் செயல்களை நாம் கடுமையாக எதிர்த்து நிற்கின்றோம்.

அநியாயமாகச் சுட்டுக் கொல்லப்பட்ட எம் தேசியப்பற்றாளனது இறுதிச் சடங்கு முடியும் வரை கறுப்புக் கொடிகளைப் பறக்க விட்டு சோக கீதங்களை ஒலிக்க விட்டு எமது எதிர்ப்பை வெளிக்கொணருமாறு குடாநாட்டு மக்கள் அனைவரையும் தொண்டு நிறுவனங்கள், அரச சார்பற்ற நிறுவனங்கள், தொழிற் சங்கங்கள் போன்றவற்றையும் பொது அமைப்பினராகிய நாம் கேட்டுக் கொள்கின்றோம் என யாழ்.மாவட்ட பொது அமைப்புக்களின் ஒன்றியம் வேண்டுகோள் விடுத்துள்ளது. (ச)

## குற்றவாளிகளை சட்டத்தின்...

டுள்ளது.

சம்பவத்தினை நேரில் கண்டவர்களிடம் விசேட பொலிஸ் குழு விசாரணை நடாத்தும் எனவும் கொலைக்கான பின்னணியையும் கண்டறியும் பொருட்டு விசாரணை நடத்தப்படும் எனவும் பொலிஸ் மா அதிபர் தெரிவித்துள்ளார்.

விசாரணைகளை துரிதமாகவும் விரிவாகவும் நடாத்தி குற்றவாளிகளைக் கண்டுபிடித்து தராதரம் பார்க்காமல் சட்டத்தின் முன் நிறுத்துமாறு ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார்.

ஜெனீவாப் பேச்சுவார்த்தைகள் ஆரம்பமாவதற்கு சில தினங்களே உள்ள நிலையில் அரசியல் கொலைகள் இடம் பெறுவது மிகுந்த கவலை அளிப்பதாகத் தெரிவித்துள்ள அரசாங்கம், விக்னேஸ்வரனின் இழப்பினால் கவலை அடைந்திருக்கும் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபத்தினை தெரிவிப்பதாகவும் அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-4)

## விக்னேஸ்வரன் படுகொலைக்கு...

காலை 9 மணியளவில் அவர் பணியாற்றுகின்ற வங்கிக்குள்ளேயே சுட்டுப் படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் மிகவும் அதியுயர் பாதுகாப்பு வலயப் பகுதியில் இச் சம்பவம் இடம்பெற்றுள்ளது. கடற்படைத் தளத்திற்கு அருகாமையில் இவ்வங்கியமைந்துள்ளது. வங்கிக்கு முன்னால் 10 மீற்றர் தூரத்தில் இராணுவக் காவலரண் உள்ளது. அதனூடேதான் வங்கிக்குச் செல்ல வேண்டும்.

வங்கிக்குள் நுழைந்தாலும் வங்கியின் பின்புறம் திருகோணமலையின் பொலிஸ் அதிகாரியின் அலுவலகம் இருக்கின்றது. அதற்கு அருகாமைப் பகுதியானது கடற்படையின் தளங்கள் அமைந்த உயர் பாதுகாப்பு வலயப் பகுதியாகும்.

இரு நபர்கள் வங்கிக்குள் நுழைந்து இப் படுகொலையைச் செய்திருப்பதாகத் தெரிகின்றது. இராணுவத்தினரது ஒழுங்கமைப்புக்கூடாகத்தான் இந்தப் படுகொலையை அவர்கள் செய்துள்ளனர்.

ஏனெனில் தாக்குதல் நடத்திவிட்டு எளிதில் திரும்பிச் செல்லக் கூடிய வாய்ப்புக்கள் அங்கு இல்லை. ஆகையால்தான் இது இராணுவத்தினரது ஒழுங்குபடுத்தப்பட்ட படுகொலையாக நாங்கள் பார்க்கின்றோம்.

தமிழ் மக்களின் உரிமைகளுக்காக குரல் கொடுத்து வந்தவர் விக்னேஸ்வரன். பல முறை அச்சுறுத்தல்களுக்குள்ளாகியிருந்த போதும் தமிழ் மக்களின் உரிமைக் குரலை வெளிப்படுத்த தமது பணிகளைத் தொடர்ந்து செய்துகொண்டிருந்தார்.

அவரது படுகொலைச் சம்பவம் மிகவும் வன்மையாகக் கண்டிக்கத்தக்கது. இதை நாம் வன்மையாகக் கண்டிப்பதோடு இப்படியான நடவடிக்கைகள் பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தும் என திருகோணமலை அரசியல் துறைப் பொறுப்பாளர் சி.எழிலன் தெரிவித்தார். (ச-4,5)

## தமிழ் மக்கள் பேரவைத்...

திருகோணமலை மாவட்ட தமிழ் மக்கள் பேரவையின் தலைவரான இவர், இலங்கை வங்கி திருகோணமலைக் கிளையில் உயர் மட்ட உத்தியோகத்தராகவும் பணியாற்றி வந்தார்.

2004 ஆம் ஆண்டு இடம்பெற்ற பொதுத் தேர்தலிலும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு சார்பில் போட்டியிட்டார். நேற்றுக் காலை இவர் வங்கிக் கடமைக்கெனச் சென்ற வேளையில் வங்கியின் உட்புற வாசலைச் சென்றடைந்த வேளை அவரைப் பின்தொடர்ந்து வந்த இனந்தெரியாத இருவர் துப்பாக்கியால் சுட்டு விட்டுத் தப்பிச் சென்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

இச் சம்பவம்இடம்பெற்ற வங்கி துறைமுகத்தை அண்மித்த பாதுகாப்பு வலயத்திலே அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் இடம்பெற்றதைத் தொடர்ந்து திருகோணமலை நகரின் மையப் பகுதிகளில் சில மணி நேரம் பதற்றமும் பரபரப்பான சூழ்நிலையும் நிலவியது.

இதேவேளை கொலையுண்ட விக்னேஸ்வரனின் சடலம் வங்கிப் பகுதியில் இருந்து திருகோணமலை அரசினர் வைத்தியசாலைக்குக் கொண்டு செல்லப்பட்டது.

அங்கு மரண விசாரணையை அடுத்து சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. இது தொடர்பான விசாரணைகளைப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ச-4,5,9)

## விக்னேஸ்வரனின்...

ஜெனீவாவில் முதலாம் சுற்றுப் பேச்சுவார்த்தை நடைபெற்றபின் துணைப் படைகளின் ஆயுதங்களைக் களைவதற்கு அரசாங்கம் தனது ஒத்துழைப்பையும் ஒப்புதலையும் தெரிவித்தபின் இராணுவ உளவுப் பிரிவினராலும் அவர்களுடன் பணியாற்றி வரும் துணைப் படையினராலும் வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை போன்ற மாவட்டங்களில் பல கொலைகளும், ஆட்கடத்தல்களும் திட்டமிட்ட வகையில் நடைபெற்று வருகின்றன.

இனப்பிரச்சினைக்கு சுமுகமான தீர்வு காண்பதற்கென தொடர்ந்து குரல் கொடுத்தவர்-பாராளுமன்றத்தின் மூலம் தனது சாத்வீகப் போராட்டத்தைத் தொடர இருந்த ஒருவர் கொலை செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலை நகரப் பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்திற்கு அருகில் முப்படைகளுடைய பூரண கண்காணிப்பில் இக் கொலைச் சம்பவம் நடைபெற்றதானது இக் கொலை சம்பவத்தின் சூத்திரதாரிகள் யார் என்பதை வெளிச்சமாகக் காண்பிக்கின்றது.

இக் கொலைகள் யாவும் திட்டமிட்ட ரீதியில் எமது போராட்டத்தை சீர்குலைக்கும் வகையில் நடைபெற்று வருகின்றது. தமிழ் மக்களின் ஜனநாயக முறையிலான வழிமுறைகள், போராட்டங்கள் யாவும் திட்டமிட்ட முறையில் அடக்கப்படுவதாகவே நாங்கள் கருதுகின்றோம்.

தமிழ் மக்களுக்காக அவர்களின் கௌரவமான தீர்வுக்காக உரத்துக் குரல் கொடுக்கும் பாராளுமன்ற உறுப்பினர்களும், கல்விமான்களும் அரச படையினரால் கொலை செய்யப்படுகின்றது என்பது அரசின் இரட்டை வேடத்தினையும் அவர்களின் சமாதானத்தின் எதிரான போக்கையும் காண்பிக்கின்றது.

அரச படைகளின் தான்தோன்றித்தனமான ஜனநாயக விரோதப் போக்கு என்பது நடைபெற்று வரும் சமாதானப் பேச்சுவார்த்தையை சீர்குலைத்து விடும்என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு கவலையடைகின்றது.

எனவே தமிழ் மக்களுடைய அரசியல் எதிர்காலத்தையும் அவர்களுடைய பாதுகாப்பையும் அவர்களே உறுதிப்படுத்தி கொள்வதேதான் தமிழ் மக்களுக்குரிய ஒரே வழியென நாங்கள் நம்புகின்றோம் என கூட்டமைப்பு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(ச-5)

7 ஆம் ஆண்டு நீங்கா நினைவு

அமரர் தம்பிப்பிள்ளை கணேசராஜா
(முன்னாள் CTB காப்பாளர்)

தோற்றம் 08.01.1942 மறைவு 12.02.1999

ஏழாண்டுகள் உமை எமை விட்டுப் பிரிந்தாலும்
ஏழு நிமிடமும் ஆகவில்லை நீங்கள் எமை விட்டு
பிரிந்து சென்று
'காலம் வெல்லும் காயங்கள் ஆறும்' - இல்லை
ஏனிந்த ஜென்மம் என ஏங்கித் தவிக்கின்றோம்.

பாடசாலை வீதி, நாவற்குழி. மனைவி, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்.
(C-242)



பரத், சந்தியா, நடித்த
காதல்
05.04.2006 முதல்
கா.நே: 10.30, 2.30, 6.30, 9.30 (பு.நே)

பிரபு முரளி நடித்த
பாசக்கிளிகள்
சங்கானை கா.நே. 11.00, 2.45, 6.00 (பு.நே)

இப்பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில 08.04.2006 இல் அச்சிட்டுவெளியிடப்பட்டது.